GOKULAM


கோகுலம்

மே 2002

ரூ.6/-





அம்பி,
பிடிக்காதே தும்பி!
பக்.48



காலில் சக்கரம் கட்டலாம்;
வாகனம் போல் பறக்கலாம்!


ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : நெருப்புக் கோழியின் இறக்கை, கால்நகம், பாப்பாவின் வளையல், தோடு, சிறுவனின் பெல்ட்.

ஒளிந்திருக்கும் பழம் எது?



விடை : அன்னாசி



தவறுகளைக் கண்டுபிடியுங்கள்!



விடை : 1. தராசுத் தட்டில் தேங்காய் (தேங்காய் எடை போடுவதில்லை) 2. எடைக்கல் இல்லாத தராசு தட்டு கீழே இறங்கியிருக்கிறது. 3. வாழைத்தார் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுள்ளது.



மலர் : 20
இதழ் : 4
மே 2002

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.

100 பேருக்குச் சாப்பாடு போட முடியுமா?

வேலுவுக்குக் கொஞ்ச நாளாக வியாபாரம் சரியாக நடக்கவில்லை. குடும்பம் கஷ்டத்தில் மூழ்கியது. அவனும் என்னென்னவோ செய்துபார்த்தான். ஆயினும் அவன் கஷ்டம் தீரவில்லை.

அந்த ஊருக்கு ஒரு துறவி வந்தார். ஊர் மக்கள் எல்லோரும் அவரைச் சென்று வணங்கி தங்கள் கஷ்டங்களைப் போக்குமாறு வேண்டிக்கொண்டனர். துறவியும் அவர்களுக்கு நல்ல அறிவுரையும் பரிகாரங்களும் சொன்னார். அது மக்களுக்கு எளிதாய் இருந்ததால் அந்தப் பரிகாரங்களைச் செய்து மக்கள் தங்கள் கஷ்டங்களைப் போக்கிக் கொண்டனர்.

வேலு இதனைக் கேள்விப்பட்டு துறவியைத் தரிசிக்கப் போனான். அவன் போனபோது அங்கு கூட்டம் மிகவும் குறைவாக இருந்தது. எனவே துறவியைச் சீக்கிரமே தரிசிக்க வாய்ப்புக் கிட்டியது.

"சாமி கொஞ்ச நாளா வியாபாரம் சரியில்லே. வீட்டிலே நிம்மதி காணாமல் போயிருச்சு. நீங்கதான் எங்களுக்கு நல்ல வழி காட்டணும்."

கண்களில் நீர் வடிய அவன் வேண்டிக் கொண்ட விதத்தைப் பார்த்து துறவிக்கே பாவமாக இருந்தது. கண் மூடி சிறிது நேரம் தியானம் செய்தார். திருநீறை அவன் நெற்றியில் பூசினார்.

"தினமும் ஒரு நூறு பேருக்குச் சாப்பாடு போடு. உன் கஷ்டமெல்லாம் விலகி செல்வம் கொழிக்கும்" என்றார்.

துறவி சொன்னதைக் கேட்ட வேலு திடுக்கிட்டான். 'நூறு பேருக்குச் சாப்பாடா? எப்படி முடியும்?' அவன் மனம் கலங்கியது. ஆனாலும் துறவியிடம் விளக்கம் கேட்க பயமாக இருந்தது. மீண்டும் தரையில் விழுந்து வணங்கிவிட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

துறவி சொன்ன பரிகாரத்தைச் செய்ய முடியாமல் அவன் மனம் தவித்தது. எதிலும் பதட்டமாக நடந்துகொண்டான். தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

துறவியைத் தரிசித்துவிட்டு வந்ததிலிருந்து கணவனின் நடவடிக்கைகள் மாறிப் போனதைக் கண்ட அவன் மனைவி வள்ளி, மெல்ல கணவனை விசாரித்தாள்.

துறவி சொன்னதைக் கவலையோடு சொன்னான் வேலு. "வீட்ல இருக்கிறவங்களுக்கே சாப்பாடு சரியா கிடைக்கலே. இதிலே நான் எப்படி தினமும் நூறு பேருக்குச் சாப்பாடு போடறது? மத்தவங்களுக்கெல்லாம் செலவு கம்மியான பரிகாரம் சொல்லிவிட்டு எனக்கு மட்டும் ஏன் சாமி இப்படி சொன்னாரு?"

"மத்தவங்களுக்கெல்லாம் என்ன சொன்னார்?" என்று ஆவலாகக் கேட்டாள் வள்ளி.

"தெற்குத் தெரு மாடசாமிக்குத் தினமும் ஒரு கைப்பிடி சோறு காக்காக்குப் போடச் சொன்னார். மீனாட்சிக்கு சனிக்கிழமை தோறும் ஒரு கட்டு அகத்திக் கீரை வாங்கி பசுமாட்டுக்குக் கொடுக்கச் சொன்னார்."

இதைக் கேட்டதும் வள்ளியின் முகம் பிரகாசமானது.

''அப்படியா சொன்னார்? அப்ப நாமளும் நூறு பேருக்குச் சாப்பாடு போட்டுடலாம்.''

''பணத்துக்கு என்ன பண்ணுவே?'' வேலன் கவலையோடு கேட்டான். எங்கே வள்ளி கடனை வாங்கித் துறவி சொன்ன பரிகாரத்தைச் செய்வாளோ என்ற பயம் வந்து விட்டது வேலுவுக்கு. ''நம்மகிட்ட இருக்கிறது போதும், நீங்க கவலையை விடுங்க'' என்றாள் வள்ளி.

மறுநாள், வள்ளி கடைக்குச் சென்று வந்தாள். அவள் பெரிதாக எதுவும் வாங்கி வரவில்லை. அரைப்படி அரிசியை ஊற வைத்தாள். அதை உரலில் இட்டு இடித்தாள். மாவை அள்ளி ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தாள். ஒரு கிண்ணத்தில் கொஞ்ச மாவை எடுத்துக்கொண்டாள். ''வாங்க, இரண்டு பேருமாகப் போயி நூறு பேருக்குச் சாப்பாடு போடலாம்.''

''உனக்கு என்ன பைத்தியமா வள்ளி? அரைக்கிண்ணம் மாவைக் கிள்ளி கொடுத்தால்கூட பத்து பேருக்கு மேல கொடுக்க முடியாதே?''

''பேசாம என் கூட வாங்க, எல்லாம் அப்புறம் தெரிஞ்சுக்குவீங்க'' என்ற வள்ளி விறுவிறுவென்று நடந்து வீட்டு வாசலிலிருந்த வேப்பமரத்தடிக்குப் போனாள். அங்கே சிற்றெறும்பு புற்று இருந்தது. மாவை அதனருகில் தெளித்துவிட்டு தள்ளி வந்து நின்றுகொண்டாள். சிறிது நேரத்தில் எறும்புகள் மாவைச் சூழ்ந்துகொண்டன.


''நூறு எறும்புகளுக்கா சோறு போடச் சொன்னார் சாமியார்?'' என்று கோபமாகக் கேட்டான் வேலு.

''காக்கைக்குச் சோறும், பசுவுக்குக் கீரையும் கொடுக்கச் சொன்னாருன்னு சொன்னீங்களே அதுல இருந்துதான் புரிஞ்சுக்கிட்டேன். வாயில்லா ஜீவன்கள் மீது நாம் கருணை கொண்டால் நம்மீது இறைவன் கருணை கொள்வான் அப்படிங்கிறதை அவர் சொல்லாமல் சொல்லியிருக்கார். எனவே நம்மால முடிஞ்ச வரைக்கும் அந்த வாயில்லா உயிர்களிடம் அன்போடு இருப்போம். கண்டிப்பா கடவுள் நமக்கு நல்ல வழி காட்டுவார்.''

''அடடே! இது எனக்குத் தெரியாமல் போச்சே?''

சிறிது நாட்களிலே அவனுக்கு வியாபாரம் சீர் பட ஆரம்பித்தது. விரைவிலேயே பழைய நிலைமையை அடைந்தான். இப்பொழுது அவன் தினமும் ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போடுகிறான்.

- சு. சௌம்யாயனி,
எட்டாம் வகுப்பு, 'அ'பிரிவு,
புனித அலாய்சியஸ்
ம.மே.நி.பள்ளி,
தூத்துக்குடி.



ரூ. 100/-



"காரசாரமான விவாதங்களில் நம்ம தலைவர் பங்கு கொள்ள மாட்டார்!"

"ஏன்?"

"அவருக்கு அல்சர்!"


\- மோகன், விருத்தாசலம்



ரூ. 15/-

ஜோக்ஸ் கார்னர்

ரூ. 50/-




- வெள்ளாளப்பட்டி சந்தோஷ்

ஜோக்ஸ் அனுப்புங்கள், பரிசுகளை வெல்லுங்கள்!

"குருக்களய்யா! சாமி சிலை என்ன இந்தக் கனம் கனக்குது?"


"பின்னே, கோயிலுக்கு வர்றவங்க எல்லாம் கடவுள் மேலே பாரத்தைப் போட்டுட்டுப் போறாங்களே!"

- நெ. இராமன், சென்னை



ரூ. 15/-

ரூ. 25/-



- பா.கவிதா, புதுடெல்லி

வலையில் சிக்கியவை



விடுமுறையில் ஜாலியாக இருக்கிறீர்களா? இதோ உங்களை மேலும் குஷிப்படுத்த இன்டர்நெட்டிலிருந்து தொகுக்கப்பட்ட ஜோக்ஸ், புதிர்கள்.

பிராணிகள் விற்பனை செய்யும் ஒருவரிடம் ஒரு கழுதை வேண்டும் என்று கேட்டார் ஒருவர். அதற்காக ஆயிரம் ரூபாய் பணத்தை முன்பணமாகவும் கொடுத்தார்.

குறிப்பிட்ட தினத்தன்று, ''உங்களுக்குத் தருவதாக வைத்திருந்த கழுதை இறந்துவிட்டது. உங்களது முன் பணத்தைத் திருப்பிக்கொடுக்கிறேன்'' என்றார் கழுதை வியாபாரி.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லையெனில், இறந்த கழுதையை எனக்குத் தர முடியுமா?''

என்றார் அந்த மனிதர். வியாபாரியும் ஒப்புக்கொண்டார். நூறு ரூபாய் செலவு செய்து, இறந்த கழுதையை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்.

ஒரு மாதம் கழித்து, இருவரும் மீண்டும் சந்தித்துக்கொண்டார்கள். ''கழுதையை என்ன செய்தீர்கள்?'' இதுதான் வியாபாரி கேட்ட முதல் கேள்வி.

வாங்கினவர், ''அதை வைத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் ரூபாய் சம்பாதித்தேன்'' என்றதும், வியாபாரிக்கு அதிர்ச்சி.

''எப்படி?'' என்றார் ஆர்வம் பொங்க.

''இறந்த கழுதையை நிற்க வைத்து, அழகுபடுத்தி ஒரு போட்டோ எடுத்து, லாட்டரி நடத்தினேன். ஒரு டிக்கெட் நூறு ரூபாய், பரிசு கழுதை என அறிவித்தேன். நூறு டிக்கெட் விற்று பத்தாயிரம் ரூபாய் கிடைத் தது.''

''ஆனால் கழுதைதான் செத்துவிட்டதே!''

''அதனால் என்ன? குலுக்கலில் பரிசு விழுந்தவரிடம் மட்டும் எதிர்பாராத விதமாக கழுதை இறந்துவிட்டது. உங்கள் லாட்டரி டிக்கெட் பணமான நூறு ரூபாயைத் திரும்பத் தந்துவிடுகிறேன் என்று சொன்னேன். அவரும் சம்மதித்தார். லாபம் 9,900 ரூபாய் தானே!''

அதிர்ந்துபோய் நின்றார் கழுதை வியாபாரி!



ஒரு துப்பறியும் நிபுணர் இரவு சாப்பிட்டுவிட்டு, தமது நண்பருடன், தரையில் படுத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.

''அட! எத்தனை அற்புதமான நட்சத்திரங்கள்!'' என்று மெய்மறந்தார் துப்பறியும் நிபுணர்.

''இந்த நட்சத்திரங்களைப் பார்க்கிறபோது, இயற்கையின் பிரம்மாண்டம் தெரிகிறது; ஆண்டவன் சிருஷ்டியின் மகத்துவம் தெரிகிறது; வானிலுள்ள நட்சத்திரங்களை வானியல் நிபுணர்களாலேயே எண்ண முடியாது என்று தெரிகிறது...'' என்று பேசிக்கொண்டே போனார்.

நண்பர், ''இவ்வளவு தெரிகிறது. ஆனால், நாம் படுத்துக் கொண்டிருக்கிறபோதே, நமது கூடாரத்தை எவரோ திருடிக்கொண்டு போய்விட்டதால்தான், நமக்கு நட்சத்திரங்கள் தெரிகின்றன என்பது மட்டும் ஏனோ உனக்குப் புரியவில்லையே!'' என்றார்.

மாண்புமிகு மரம்!



அடுத்து, இங்குள்ள கோட்டையைக் கவனியுங்கள். 'A' என்பது அதன் நுழை வாயில். அதற்குப் போகிற வழியில் இருக்கும் இரண்டு இடங்கள் 'B' யும் 'C' யும். நுழை வாயிலிலிருந்து, தூரத்தில் உள்ள இடம் எது? B யா? C யா?

படத்தைப் பார்க்கிறபோது, 'C' தான் 'B' யைவிட தூரத்தில் இருப்பதுபோலத் தோன்றும். ஆனால் இரண்டுமே, நுழைவாயிலிலிருந்து சம தூரத்தில் இருக்கின்றன.

நம்ப முடியவில்லையா? ஸ்கேல் வைத்து அளந்து பார்த்து விடுங்கள்.

ஒரு கட்டடத்தில், இரு வெளவால்கள் தொங்கிக்கொண்டிருந்தன. ஒரு வெளவால், "பக்கத்தில் எங்காவது போய் எனக்குச் சாப்பிட, பழம் கொண்டு வருகிறாயா?" என்று கேட்டது. சரி என்று பறந்து சென்ற வெளவால், சிறிது நேரத்தில், முகத்தில் ரத்தம் சொட்டச் சொட்ட திரும்பி வந்தது.

"என்ன ஆயிற்று?" என்று பதட்டத்துடன் கேட்டது பழம் கேட்ட வெளவால்.

"நேர் எதிரே ஒரு முள் பதித்த வேலி இருப்பது உனக்குத் தெரிகிறதா?" என்று கேட்க, "இல்லையே!" என்றது முதல் வெளவால்.

"அதேதான்! எனக்கும் தெரியவில்லை. போய் மோதி, அடிபட்டுக் கொண்டேன்!" என்றது அடிபட்ட வெளவால்.

இனி ஒரு படப்புதிர்: இங்கே இருப்பது வெறும் மரமில்லை. அதை உற்றுப் பாருங்கள். சில பிரபல தலைவர்களின் தலைகள் தெரிகிறதா? எங்கே... ஒவ்வொருவராக அடையாளம் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

மொத்தம் பத்து பேர்களில் உங்களால் யார் யாரைக் கண்டுபிடிக்க முடிந்தது? உங்கள் விடையைச் சரி பார்த்துக்கொள்ளுங்கள். மேலே இருந்து கீழே, இடதுபுறம்: காந்திஜி, திலகர், நேருஜி, லால்பகதூர் சாஸ்திரி, ராஜீவ்காந்தி, வலதுபுறம்: கான் அப்துல்



கபார்கான் (எல்லை காந்தி), சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங், டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்திராகாந்தி.

ஆக, இந்த மரம் சாதாரண மரமில்லை; இந்தியாவின் தேசிய மரம்!


- கௌதம் ராம்

மூன்று சோதனைகள்

கதை : பி.கார்த்திகா, பதினோராம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா பள்ளி, சென்னை.

படம் : மகேஸ்




... மேளத்துக்குள்ளே வைத்து தைத்து விடு. அதை மெதுவாகக் கொண்டு போய் மன்னரிடம் கொடு.
கொடுத்தால்?
மன்னர் மேளத்தை அசைக்கும்போது தேனீ பறந்து வந்து மேளத்தைக் கொட்டும். அப்போது சத்தம் வரும்.
ரொம்ப நல்ல யோசனை. அப்பா, வரேன்.
மறுநாள் அரசவையில் மன்னர் மேளத்தை வாங்கி அசைத்தார்.
டும்.... டும்... டும்....
ஆஹா! வேலா, நீதான் என் அமைச்சர். இந்த யோசனை எப்படி வந்தது உனக்கு?
மன்னிக்க வேண்டும் அரசே! நான் உண்மையைச் சொன்னால் தாங்கள் குற்றமாகக் கருதக் கூடாது?
நீ எது சொன்னாலும் தவறாக எண்ண மாட்டேன்.
இது என் யோசனை அல்ல. என் தந்தையின் யோசனை.
அவர் எங்கே?
தங்களின் கட்டளைப்படி பக்கத்து நாட்டில் வசிக்கிறார். அனுபவம் மிக்க பெரியவர்கள் நம்முடன் இருப்பது எப்பொழுதும் நல்லது அரசே!
நான் இப்பொழுதே வயதானவர்கள் அனைவரையும் நம் நாட்டுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்.

கணித விளையாட்டுகள்!

மாஜிக் சதுரம்

இந்த மாஜிக் சதுரம் மிகவும் விறுவிறுப்பான விளையாட்டு. ஒரு வெள்ளைத் தாளில் கீழே கொடுத்துள்ளபடி சதுரம் வரைந்து எண்களைக் குறியுங்கள்.

எப்படி விளையாடுவது?

~~128~~	~~192~~	~~249~~	~~170~~	(117)
~~49~~	~~115~~	(172)	~~93~~	~~40~~
~~137~~	~~203~~	~~260~~	(181)	~~128~~
~~70~~	(136)	~~193~~	~~114~~	~~61~~
(65)	~~131~~	~~188~~	~~109~~	~~56~~

★ மேலே குறிப்பிட்ட எண்களைத் தவறு செய்யாமல் அப்படியே எழுதிக் கொள்ளுங்கள்.

★ ஒரு சிறிய தாளில் 671 என்ற எண்ணை எழுதி ஒரு கவரில் போட்டு ஒட்டி விடுங்கள்.

★ உங்கள் நண்பர்களை அழைத்து உட்கார வைத்து, ஒருவரைக் கூப்பிட்டு ஏதாவது ஒரு எண்ணைக் கூறச் சொல்லுங்கள். அவர் 117 என்று சொன்னால் அந்த எண்ணை வட்டமிட்டுவிட்டு, அந்த வரிசையிலுள்ள மற்ற எண்களை அடித்து விடுங்கள். எண்களை அடிக்கும் போது நேராகவும் அடிக்கலாம். அல்லது பக்கவாட்டிலும் அடிக்கலாம். பிறகு அடுத்த எண்ணைச் சொல்லச் சொல்லி ஒவ்வொரு வரிசையாக அடித்து கொண்டு வரவேண்டும். எல்லா வரிசையும் அடிக்கப்பட்டவுடன் அந்த நபரை வட்டமிட்ட எண்களைக் கூட்டச் சொல்ல வேண்டும். 671 என்று கூறுவார். உடனே கவரிலுள்ள தாளைப் பிரித்துப் பார்க்கச் சொல்லவும். அந்த நபர் அசந்து போய் விடுவார். ஏனென்றால் கவரிலுள்ள எண்ணும் அவர் வட்டமிட்டுக் காட்டிய எண்களின் கூட்டுத் தொகையும் 671தான். அடுத்து புதிதாக மீண்டும் எண்களைச் சதுரத்தில் எழுதிக் கொண்டு அடுத்த நபரை விளையாடச் சொல்ல வேண்டும். எப்படி விளையாடினாலும் விடை 671 தான் வரும்.

- ஆர். காவ்யா, சென்னை.

எண் விளையாட்டு

உங்கள் நண்பர்கள் 14 பேரை இந்த விளையாட்டுக்கு அழையுங்கள். ஏழு, ஏழு பேராக இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவிலும் முதல் ஐந்து பேரை அமரச் சொல்லுங்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கீழ்க்கண்டவாறு அடுத்து உள்ளவரை விட இரு மடங்கு மதிப்புள்ள ஒரு எண் அளிக்க வேண்டும்.

1,2,4,8,16

இந்த எண்களை அவர்களின் மதிப்பாகக் கொள்ள வேண்டும். இந்த எண்களை அட்டையில் எழுதி அவர்களின் கையில் அளிக்க வேண்டும்.

இப்பொழுது நீங்கள் 1லிருந்து 31க்குள் (1+2+4+8+16=31) ஒரு எண்ணைக் கூற வேண்டும். உங்கள் நண்பர்கள் தங்கள் எண் மதிப்பின் கூட்டுத்தொகை கூறப்பட்ட எண்ணிற்குச் சமமாக வருமாறு தங்கள் கையைத் தூக்க வேண்டும். உதாரணமாக 25 என்று நீங்கள் கூறினால் 16,8,1 என்ற எண்ணுள்ள நண்பர்கள் கைகளைத் தூக்க வேண்டும்.

அடுத்து இரு குழுக்களிலும் இன்னொரு நபரைச் சேர்த்துக்கொண்டு 1,2,4,8, 16, 32 எண்களை அளிக்க வேண்டும். 1லிருந்து 63க்குள் ஏதாவது ஒரு எண்ணைக் கூறி விளையாடுங்கள். திடீரென 72 என்று ஒரு பெரிய எண்ணைக் கூறுங்கள். அமைக்க முடியாமல் திணறுவார்கள். 6 பேர்களால் இது இயலாது என்பதைக் கண்டறிவார்கள் பின்னர் 7 பேர் கொண்ட குழுவை அமைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது 127வரை உள்ள எண்களுக்கு உங்கள் நண்பர்களால் கை தூக்க இயலும்.


இந்த விளையாட்டை 5 அல்லது 6 முறை விளையாட வேண்டும். எந்தக் குழு அதிகமுறை சரியாகக் கைதூக்கி வெல்கிறதோ அந்தக் குழுவை வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும்.

சுரங்கம்

இந்த விளையாட்டும் ரொம்ப விறு விறுப்பாகவும், சுவாரசியமாகவும் இருக்கும். குறைந்தது 2 பேர் விளையாடத் தேவை.

இரண்டு பேர் ஆளுக்கு ஒரு வெள்ளைத் தாள் பென்சில், பேனா எடுத்துக் கொள்ளவும். இருவரும் 25 கட்டங்களை சதுரத்துக்குள் வரையவும் (5x5=25) அதில் 1 முதல் 25 வரை எண்களை எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளவும்.

கீழே உள்ள கட்டங்களைப் போல் நிரப்பிக் கொண்டவுடன் முதல் நபர்



ஏதாவது ஒரு எண்ணைக் கூறி பென்சிலால் அடிக்க வேண்டும். அடுத்த நபர் முதல் நபர் கூறிய எண்ணை அடித்து விட்டு வேறொரு எண்ணைக் கூறி அதையும் அடிக்க வேண்டும் (யார் சொன்னாலும் அந்த எண்ணை அடிக்க வேண்டும்) நேராகவோ, பக்கவாட்டிலோ, குறுக்கிலோ அடிக்கலாம். ஒரு வரிசை எண்கள் முழுவதும் அடிபட்டவுடன் பேனாவால் ஒரு கோடு போட்டு மேலே எழுதியிருக்கும் சுரங்கம் என்ற எழுத்துகளில் ஒன்றை அடிக்க வேண்டும். இவ்வாறு யார் முதலில் சுரங்கம் என்ற ஐந்து எழுத்துகளை அடிக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

- எஸ். பாலா, தஞ்சாவூர்

சு	ர	ங்	க	ம்
4	10	15	2	6
21	19	9	23	14
16	1	22	5	20
7	11	18	13	24
12	25	3	8	17

~~சு~~	~~ர~~	~~ங்~~	~~க~~	~~ம்~~
4	~~10~~	15	2	~~6~~
21	~~19~~	9	~~23~~	~~14~~
16	~~1~~	~~22~~	~~5~~	~~20~~
~~7~~	~~11~~	~~18~~	~~13~~	~~24~~
~~12~~	~~25~~	~~3~~	~~8~~	~~17~~

பட்டன் விளையாட்டு

இந்த விளையாட்டுக்கு குறைந்தது இரண்டு பேர் தேவை. அதிக பட்சம் 4 பேர் விளையாடலாம்.

ஒரு சதுர அட்டையை எடுத்துக் கொண்டு கீழே போட்டிருப்பது போல் எண்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

பிறகு 6 பட்டன்களையும், ஒரு பேனா, நோட்டையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

5	50
10	20
20	10
50	5

அட்டையைத் தரையில் வைத்து விட்டு எதிர் எதிரே அமர்ந்தபடி விளையாட ஆரம்பிக்கலாம்.

முதல் நபர் கையை அட்டைக்கு வெளியே வைத்து (சுமார் 1 அடி தூரம் தள்ளி) ஒவ்வொரு பட்டனையும் அட்டையில் உள்ள எண்களை நோக்கிச் சுண்ட வேண்டும். பட்டன் எங்கு விழுகிறதோ அந்த எண்களை அவர் பெயரில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். பட்டன் நடுக்கோட்டிலோ அல்லது அட்டையை விட்டு வெளியிலோ விழுந்தால் மதிப்பெண் கிடையாது. ஆறு பட்டன்களையும் போட்டு முடித்த பிறகு அடுத்தவர் விளையாட ஆரம்பிக்க வேண்டும். இப்படி 8, 10 ஆட்டங்களுக்குப் பிறகு இருவரின் மொத்த மதிப்பெண்களையும் கூட்ட வேண்டும். யார் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

- இச்சா சேத்தி, சென்னை.

ஐஸ்கிரீம் எப்படி தயாராகிறது?

அன்புள்ள நண்பர்களுக்கு,

பரீட்சை முடிந்து ஜாலியாக வீட்டிலிருப்பீர்கள். விடுமுறையில் என்ன செய்யலாம் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோது நம் கோகுலம் அலுவலகத்திலிருந்து இனிய அழைப்பு வந்தது. ஒரு ஃபாக்டரி விசிட்டுக்காக வைஷ்ணவி, சித்தார்த், விநோதாவுடன் நானும் கிளம்பினேன்.

நாங்கள் போகப் போற இடம் ஹட்சன் ஃபுட்ஸ் நிறுவனத்தின் அருண் ஐஸ்கிரீம் தொழிற்சாலை என்று அறிந்ததும் எங்களின் சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்?

சென்னையிலிருந்து ஒரு மணி நேர பயணத்துக்குப் பின் நல்லூர் கிராமத்தில் அருண் ஐஸ்கிரீம் என்ற போர்டு எங்களைப் பார்த்து சிரித்தது.

நாங்கள் அலுவலகத்தில் நுழைந்ததும் மானேஜர் ரமேஷ் எங்களை வரவேற்றார். தமிழ்நாடு மட்டும் அல்லாமல் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் என தென்னிந்தியா முழுவதும் அருண் ஐஸ்கிரீம் 1080 பார்லர்களில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறினார்.

எங்களுக்குத் தலைக்கு ஒரு பிளாஸ்டிக் தொப்பியும், காலுக்குச் செருப்பும் கொடுத்து அணியச் சொன்னார்கள். இரண்டையும் மாட்டிக் கொண்டு தொழிற்சாலை வாசலை அடைந்தோம். அங்கு 'அயோடோஸ் போர்' என்ற ரசாயன திரவத்தால் கைகளைக் கழுவச் சொன்னார்கள். எங்களுக்கு ஒரே வியப்பு. "நாங்களா ஐஸ்கிரீம் செய்யப் போறோம்?" என்று கேட்டான் சித்தார்த். சிரித்த மானேஜர், "இது சாப்பிடக் கூடிய பொருள் இல்லையா, அதனாலதான் இவ்வளவு சுத்தத்தைக் கடைப்பிடிக்கிறோம்" என்றார்.

முதலில் நாங்கள் நுழைந்த இடம் ஸ்டோர் ரூம். அங்குதான் முந்திரி, பாதாம், பிஸ்தா பருப்புகள், உலர்ந்த பழ வகைகள், சர்க்கரை, கிரீம், குளுக்கோஸ், எசன்ஸ், வண்ணம் ஊட்டிகள் என்று ஐஸ்கிரீமுக்குத் தேவையான 300 விதமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. ஸ்டோர் ரூமுக்கு அருகிலேயே ஒவ்வொரு பொருளின் தரமும் பரிசோதிக்கப்பட்டு தயாரிப்புப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது.

அங்கிருந்து பால் சுத்தி





கரிப்பு பகுதிக்குச் சென்றோம். "வெளியிலிருந்து கொண்டு வரப்படும் பால் இங்கு வடிகட்டப்படுகிறது. வடிகட்டப்பட்ட பால் இங்கிருந்து பெரிய தொட்டிக்கு மோட்டார் மூலம் பம்ப் செய்யப்படுகிறது" என்று விளக்கினார் அதிகாரி பாஸ்கர்.

அடுத்து நாங்கள் நுழைந்த பகுதி மிகவும் முக்கியமானது. அங்குதான் ஐஸ்கிரீம் தயாராகிறது. தொட்டியிலிருந்து வருகிற பாலை முதலில் சில்லர் பிளேட்டில் குளிர்விக்கிறார்கள். பிறகு பாஸ்ச்சரைஸர் தொட்டிக்கு அனுப்பி அங்கே 55 டிகிரிக்குச் சூடேற்றுகிறார்கள் (கிருமிகள் தாக்காமல், பாலைக் கெடாமல் வைக்கும் செயல்முறைதான் பாஸ்ச்சரைஸர் எனப்படுகிறது). இங்கேயே பாலுடன் பால் பவுடர், சர்க்கரையையும் சேர்த்து கலக்குகிறார்கள். பிறகு அங்கிருந்து இந்தக் கலவை மிக்ஸ் பம்புக்குப் போகிறது. அங்கு நன்றாக அடித்து கலக்கின பிறகு ஹோமொஜினைஸிங் இயந்திரத்துக்கு அனுப்பப்படுகிறது.



ஹோமொஜினைஸிங்னா என்னவென்று கேட்டேன் நான். "எந்தப் பிசிறும் இல்லாத ஒரே சீரான பொருளாக மாற்றுவதைத்தான் ஹோமொஜினைஸிங் என்று சொல்கிறோம். அதாவது பாலில் கொழுப்புச் சத்து மேலேதான் மிதக்கும். அதை எல்லா இடத்திற்கும் பரவச் செய்து ஒரே மாதிரி குறைத்து விடுகிறோம்" என்றார் பாஸ்கர்.

இப்படி செய்யும்போது ஐஸ்கிரீம் ஒரே சீராக மென்மையாக ஆகிறது.



இவ்வளவு வேலைகள் முடிந்து விட்டதே. இனி ஐஸ்

விஜி





• ஐஸ்கிரீம் பெட்டிகளில் அடைக்கப்படுகிறது

கிரீம் ரெடின்னு நினைச்சோம். ''இன்னும் நிறைய வேலை பாக்கி இருக்குது. திரும்பவும் இந்தக் கலவையை 90 டிகிரிக்குச் சூடாக்கி அப்படியே 20 நிமிஷம் வச்சிருப்போம். அப்புறம் அதைக் குளிர வைத்து தொட்டிகளில் நிரப்புவோம். இங்கிருந்து கன்ட்டின்யுவஸ் ஃப்ரீஸருக்குப் போகும். அங்கேதான் எசன்ஸ், வண்ணம் எல்லாம் சேர்த்து தயிர் கடைகிற மாதிரி கடைவோம்'' என்றார் பாஸ்கர்.

நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே பாதி உறைந்த நிலையில் குழாய் வழியே வந்து விழுந்தது ஐஸ்கிரீம்.

''குறைவான கலவை உள்ளே போயிட்டு வெளியே வரும்போது எப்படி நிறைய வருது?'' என்று கேட்டாள் வைஷ்ணவி.

சிரித்த அதிகாரி ''ஏர் இன்கார்பரேஷன் முறையில அது பல மடங்காகப் பெருக்கப்படுகிறது'' என்று விளக்கம் அளித்தார்.

இப்ப நாங்கள் பார்த்த கலவைதான் எல்லா ஐஸ்கிரீமுக்கும் அடிப்படை. அதற்குப் பிறகு விதவிதமான காம்பினேஷனில், வெவ்வேறு சுவையுள்ள ஐஸ்கிரீமாக மாறுகிறது.

ஐஸ்கிரீம் முழுமை அடைந்தவுடன் குழாய் மூலம் வெவ்வேறு அளவுள்ள குப்பி, கோன், பாக்கெட்களில் அடைபட்டு மீண்டும் ஃப்ரிட்ஜ்க்கு அனுப்பப்படுகிறது.

ஐஸ்கிரீம் தயாரித்து இரண்டு நாள் வரையிலும் இங்குள்ள ஃப்ரிட்ஜுக்குள் வைக்கப்பட்டு பிறகே வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஐஸ்கிரீம் கொண்டு செல்லும் வாகனத்திலும் ஃப்ரிட்ஜ் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஃப்ரிட்ஜைப் பார்க்கப் போனோம். அங்கே ஒரு சுவாரசியமே காத்துக் கொண்டிருந்தது. நம் வீட்டில் இருக்கும் ஃப்ரிட்ஜ் போல் இல்லை. பெரிய, பெரிய அறைகளே ஃப்ரிட்ஜாக இருந்தன! அதற்குள் ஆயிரக்கணக்கான ஐஸ்கிரீம் பாக்கெட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குபுகுபுவென்று வெளிவந்த ஈரக்காற்றும், தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த ஐஸ் கட்டிகளும் ஆர்டிக், அண்டார்டிக் பகுதிகளை நினைவூட்டின. அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஸ்வெட்டர் அணிந்து இருந்தனர். எங்கள் எல்லோருக்கும் குளிர் தாங்கவில்லை. வெளியே ஓடி வந்துவிட்டோம். அந்த அறையின் வெப்ப நிலை மைனஸ் 18 டிகிரி.

இதை விடவும் குளிர் அதிகமான ஃப்ரிட்ஜ் இருந்தது. அதனுடைய வெப்ப நிலை மைனஸ் 40 டிகிரி. நாங்கள் உள்ளே செல்லவில்லை. அவசரமாக ஐஸ் உறைந்து வெளியே போக வேண்டும் என்றால் இதைப் பயன்படுத்திக் கொள்வார்களாம்!

தொழிற்சாலைக்கு உள்ளேயே கெமிக்கல் பரிசோதனைக் கூடம், மைக்ரோ பயாலஜி பரிசோதனைக் கூடம் எல்லாம் இருக்கின்றன. ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு நிலையிலும் இங்கு பரிசோதிக்கப்பட்டு தரம் உறுதி செய்யப்படுகிறது.

''இவ்வளவு பாதுகாப்பாகவும் சத்து நிறைந்ததாகவும் செய்யப்படும் எங்கள் ஐஸ்கிரீம் உடலுக்கு மிகவும் நல்லது. சரியாகப் பராமரித்தால் 12 மாதம் வரை கூட வைத்திருந்து உபயோகப்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4,800 லிட்டர் ஐஸ்கிரீம் இங்கு செய்யப்படுகிறது'' என்று கூறினார் மானேஜர்.


அதிகாரி பாஸ்கர் எங்கள் அனைவருக்கும் 'கசாட்டா' ஐஸ்கிரீம் கொடுத்தார். சுவைத்து முடித்தவுடன் அதிகாரிகளுக்கு நன்றி கூறி கிளம்பினோம்.

இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது நீங்களும் எங்களுடன் 'ஃபாக்டரி விசிட்' செய்து முடித்தீர்கள்தானே!

அன்புடன்
கௌரி

படங்கள் : ஸ்ரீஹரி

ஐந்தாவது முறையாக சாம்பியன்!



* அகஸ்ஸி

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் கீபிஸ்கேன் டென்னிஸ் மாஸ்டர்ஸ் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஐந்தாவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றார் ஆந்த்ரே அகஸ்ஸி.

ஸ்விட்சர்லாந்து வீரர் ரோஜர் ஃபெடரரை 6-3, 6-3, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் டென்னிஸ் ஆட்டத்தில் வென்றார் அகஸ்ஸி. 1990, 95, 96 மற்றும் 2001ஆம் ஆண்டுகளிலும் இப்பட்டத்தை அகஸ்ஸி வென்றுள்ளார். இதற்கு முன் ஐந்து முறை இப்பட்டத்தை வென்றவர் ஸ்டெஃபி கிராஃப்.

ஒற்றையர் ஆட்டங்களில் அகஸ்ஸிக்கு இது 700வது வெற்றி. 700 ஆட்டங்களுக்கு மேல் வெற்றி பெற்ற ஒன்பதாவது வீரர் இவர். 2002ஆம் ஆண்டில் அகஸ்ஸி வென்றுள்ள இரண்டாவது பட்டம் இது.



* செரீனா

செரீனா சாம்பியன்

அமெரிக்காவின் கீபிஸ்கேனில் நடைபெற்ற நாஸ்டாக் 100 உலக மகளிர் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டத்தை வென்றார். அவர் உலகின் முதல் நிலை ஆட்டக்காரரான ஜெனிஃபர் காப்ரியாட்டியை 7 - 5, 7 - 6 (7-4) என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். இந்தப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் அக்கா வீனஸ் வில்லியம்ஸைத் தோற்கடித்து இறுதிக்குச் சென்றார் செரீனா என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 1998, 99, 2001 ஆகிய ஆண்டுகளில் இந்த சாம்பியன் பட்டங்களை செரீனா வென்றிருக்கிறார்.

கிரிக்கெட்


இங்கிலாந்து-நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையே ஆக்லாந்தில் 3 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் டிரா ஆனது. இறுதி டெஸ்டை நியூஸிலாந்து வென்றது. எனவே இத் தொடர் சமன் செய்யப்பட்டது.


மேற்கிந்தியத் தீவுகளில் இந்தியா

5 டெஸ்ட் மற்றும் 5 ஒரு தினப் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் விளையாடுவதற்காக இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றிருக்கிறது. ஏப்ரல் 11ந் தேதி முதல் டெஸ்ட் ஆரம்பம். ஜூன் 2ந் தேதி வரை போட்டிகள் நடைபெற உள்ளன.

சிறகடித்துப் பறக்கும் பட்சி

கார்ட்டூன் படங்களில் கதாபாத்திரங்களின் ஒவ்வொரு அசைவுக்கும் ஒவ்வொரு படம் வரையப்படுகிறது. இப்படி பல்லாயிரக்கணக்கான படங்களை வேகமாக திரையில் ஓட்டும் போது அவை அசைகின்றன. கீழே உள்ள படங்களும் அதே தத்துவத்தைக் கொண்டவைதான். படங்களை ஒரு தடிமனான காகிதத்தில் ஒட்டி கத்தரியுங்கள். வரிசைப் படி படங்களை வைத்து இடது கையால் ஒரு புறம் பிடித்து வலது கையால் மறுபுறம் விர்ர்ரென்று பக்கங்களை விடுவித்துப் பாருங்கள். பறவை அழகாக இறக்கையை அசைத்துப் பறக்கிறதா?





நான் யார்?

இது ஒரு சுவாரசியமான விளையாட்டு. குறைந்தது இரண்டு பேரிலிருந்து அதிக பட்சம் எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாட லாம். இவ்விளையாட்டை வீட்டிலோ, ரயில் – பஸ் பிரயாணங்களின் போதோ எங்கு வேண்டு மானாலும் விளையாடலாம்.

ஒருவருக்கு பொருள், தலைவர்கள், ஊர், பிராணிகள் என்று ஏதாவது ஒரு பெயரை நாம் வைக்க வேண்டும். நாம் வைக்கும் பெயர் அவருக் குத் தெரியக் கூடாது. பெயர் வைக்கப்பட்டவர் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுத் தன் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் கேட்கும் கேள்விக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதில் மட்டுமே அளிக்க வேண்டும். எவ்வளவு விரை வாக அதாவது 10 அல்லது 12 கேள்விகளுக்குள் பெயரைக் கண்டுபிடிக்க வேண்டும். 12 கேள்வி களுக்கு மேலும் கண்டுபிடிக்க முடியாதவர்கள் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும். பிறகு அவரின் பெயரை மற்றவர்கள் கூறிவிடலாம்.

இரண்டு பேர் மட்டும் விளை யாடினால் ஒருவர் மனதுக்குள் ளேயே பெயரை வைத்துக் கொள்ள லாம். குழுவாக விளையாடினால் யாருக்குப் பெயர் வைக்கப் போகிறோமோ அவரைச் சற்றுத் தொலைவுக்கு அனுப்பிவிட்டு குழுவினரின் விருப்பப்படி ஒரு பெயரைச் சூட்ட வேண்டும்.

எப்படி விளையாடுவது?

நம் குழுவில் உள்ள அனி தாவை வெளியில் அனுப்பிவிட்டு 'வண்ணத்துப் பூச்சி' என்று அவருக்குப் பெயர் வைக்கிறோம். அனிதாவை வரச் சொல்லி தகவல் தருகிறோம்.

"நான் பூமியில் இருப்பேனா?" — அனிதா.

"ஆம்" — நாம்.

"எனக்கு உயிர் உண்டா? இல்லையா?"

"இப்படி ரெண்டு கேள்வி கேட்டால் எப்படி பதில் தர முடியும்? நாங்க 'ஆமாம்' அல்லது 'இல்லை'ன்னு மட்டும்தான் பதில் சொல்வோம்."

"சரி, சரி. மறந்துட்டேன். எனக்கு உயிர் உண்டா?"

"ஆம்."

"இடம் விட்டு இடம் செல்வேனா?"

"ஆம்."

"ஆறறிவு படைத்தவனா?"

"இல்லை."

"நாலுகால் இருக்குமா?"

"இல்லை."

"பறப்பேனா?"

"ஆம்."

"பறவை இனமா?"

"இல்லை."

"ம்...உயிர் இருக்கும், பறக்கும், ஆனால் பறவை கிடையாது.... பூச்சி இனத்தைச் சேர்ந்தவனா?"

"ஆம்."

"உங்களுக்குப் பிடிக்குமா?"

"ஆம்."

"அழகாகப் பல வண்ணங்களில் இருப்பேனா?"



"ஆம்."

"மலருக்கு மலர் பறந்து செல்வேனா?"

"ஆம்."

"வண்ணத்துப் பூச்சி."

"ரொம்ப சரி. எல்லாரும் அனிதாவுக்குக் கை தட்டுங்கள்."

இந்த விளையாட்டைப் பற்றி ஓரளவு ஐடியா கிடைத்திருக்கும் உங்களுக்கு. கேள்வி கேட் பவர்கள் ஏற்கெனவே கேட்ட கேள்வி — பதிலை மனதில் பதித்துக் கொண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் குறைந்த கேள்வி களில் கண்டுபிடிக்க முடியும். என்ன, விளையாடத் தயாராகி விட்டீர்களா? உங்கள் அனுபவத்தை கோகுலத்துக்கு எழுதி அனுப்புங்கள்.







'பல்'சுவை விஷயங்கள்!

யானையின் வாயில் ஆகாரத்தை மென்று கூழாக்கும் பணியைச் செய்வது பக்கத்திற்கு இரண்டாக அமைந்துள்ள நான்கு பற்கள். இந்த நான்கு பற்களும் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை விழுந்து மறுபடியும் முளைக்கின்றன. இவ்வாறு ஐந்து முறை விழுந்து முளைத்ததும் — கடைசி முறையாக விழுந்தபின் பற்கள் முளைப்பதில்லை.

▼ எலிகள் எதையாவது கடித்துப் பற்களின் கூர்மையான முனைகளைத் தேய்த்துக் கொள்கின்றன. புத்தகம், பேப்பர், ரப்பர், பிளாஸ்டிக் இன்னும் மற்ற பொருள்களைக் கடித்துக் குதறுவதெல்லாம் பற்களைத் தேய்த்துக் கொள்வதற்காகவே. எலிகள் இப்படி கண்டதையெல்லாம் கடித்துத் தனது பற்களைத் தேயச் செய்யாவிட்டால் அதன் முன்பற்கள் மூன்றடி நீளம் வளர்ந்து சாப்பிட முடியாமல் போய்விடும்.

▼ புலியின் வேட்டைக்கு ஆதாரம் அதன் வாயில் அமைந்துள்ள நான்கு கோரைப் பற்கள் தான்! இவற்றில் ஒன்று விழுந்துவிட்டாலும் புலியால் பெரிய பிராணிகளைக் குத்திக் கிழித்துத் தின்ன முடியாது.


▼ கொரில்லா குரங்குகளின் பற்கள் மனிதனின் பற்களைப் போலவே வடிவத்திலும், எண்ணிக்கையிலும் ஒத்திருக்கின்றன. ஆனால் பக்கவாட்டுப் பற்கள் வெகு கூர்மையானவை.

▼ நத்தையின் நாக்கில் 135 வரிசைகளாக 14,175 நுண்ணிய பற்கள் உள்ளன.











▼ கடலில் வாழும் சுறா மீனுக்கு மிக அதிசயமான பற்கள் அமைந்துள்ளன. சுறாவின் முன்புறப் பற்கள் தேய்ந்து விழுந்தவுடன், பின்புறமுள்ள பற்கள் முன் புறத்திற்கு நகர்ந்து வருகின்றன. ஆனால் அவற்றின் உறுதி மட்டும் குறைவதில்லை.

▼ திமிங்கலத்திற்குப் பன்னிரண்டு வரிசைப் பற்கள்!

▼ காண்டாமிருகம் தன்னுடைய எதிரியைப் பற்களினால்தான் தாக்கும். கொம்பினால் அல்ல.

▼ சில அபூர்வ மீன்கள், கடல் ஆமை ஆகியவற்றுக்கு (வயிற்றில்) அன்னக் குழாய்களிலேயே பற்கள் அமைந்துள்ளன. இந்தப் பற்கள் கூர்மையாகவும், கும்பலாகவும் இருக்கும். இவை விழுங்கும் இரையைக் குத்திக் கிழித்து, புரட்டிக் கூழாக்கும்.

▼ முதலைக்கு வாழ்நாளில் எத்தனை தடவை எத்தனை பற்கள் விழுந்தாலும் திரும்ப முளைத்துவிடும்.

— ஏ.கே. நாசர்

எது பெருமை?

தென்னை மரம் பனை மரத்தைப் பார்த்து சலசலத்தது. ''எப்பொழுதும் சண்டைக்கு வருவே. இன்னிக்கு என்ன சிரிக்கறே?'' என்றது வியப்புடன் பனை. ''என்னை வளர்க்க மனிதன் எவ்வளவு ஆசைப்படுகிறான். கோயில் பூஜை, கல்யாணம், சாப்பாடுன்னு நான் இல்லாத இடமே கிடையாதுன்னு சொல்லலாம். நீயும் இப்படி நெட்டையாகச் சும்மா நிற்கிறியே! அதை நினைத்துதான் சிரித்தேன்'' என்றது தென்னை.


''உன் அறியாமையை என்னவென்று சொல்வது? தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுத்து மிதியடியாக்கிக் காலுக்குப் போட்டுக்கிறாங்க'' என்று கூறியது பனை.


தென்னைக்குக் கோபம் பயங்கரமாக வந்தது. ''என்ன வாய் ரொம்ப நீளுது? என்னை விட உயர்ந்த பயன் ஒன்றை உன்னால் சொல்ல முடியுமா?'' என்றது தென்னை.

''நீ கேட்பதால் சொல்கிறேன் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற அருங்காப்பியங்களைக் காப்பாற்றி கொடுத்தது யார் தெரியுமா? எங்களுடைய ஓலைகளே! ஓலைச் சுவடி என்றால் அது பனை ஓலைச் சுவடிதான் என்பதை யாவரும் அறிவர். இதுதான் எனக்குப் பெருமை!'' என்றது பனை.

தென்னை தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டது.

எஸ். சாமிநாதன், மன்னார்குடி







குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம் :

1. கங்காருக்களின் நாடு (6)
4. கூடி உண்ணும் பறவை (3)
5. குடுவை போல் கொடியில் காய்க்கும் காய் (2)
8. ஷாஜஹான் தாஜ்மஹாலைக் கட்டினார். சரியா? (2)
9. ———— வைக்க வேண்டிய இடத்தில் பூ வைக்கலாம் என்று சொல்வார்கள் (2)
11. ஆறு (2)

வலமிருந்து இடம்

3. தாவரங்கள் உணவை இந்தப் பகுதியில் சேமித்து வைக்கின்றன. (2)
6. ——— எல்லோரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு வாழ வேண்டும். (2)
10. பொருட்கள் எல்லாம் ஒரே இடத்தில் விற்கப்படும் இடம் (3)
14. அல்வாவுக்குப் பெயர் பெற்ற ஊர் (6)

மேலிருந்து கீழ்

1. தாவர வகையைச் சேர்ந்த இது மிகப் பெரியது; விழுதுகளுடையது (5)
2. வாரத்தின் இரண்டாவது நாள் (4)
3. வாகனங்களில் செல்லும்போது அதிக ——— ஆபத்தைத் தரும் (3)
10. தவறுக்கு எதிர்பதம் (2)

கீழிருந்து மேல்

4. யானைக்கு இது முறம் போல் இருக்கும் (2)
5. எலிகளில் ஒரு வகை (4)
7. சோப்பை நீரில் கரைத்தால் ——— வரும் (2)
9. அரிசி, சோளம் போன்றவற்றை வறுத்தால் ——— கிடைக்கும் (2)
11. உணர் கொம்புகளை நீட்டியபடி மெதுவாக நகரும் உயிரினம். ஆபத்து ஏற்பட்டால் தன் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் (3)
12. மன்னனை இப்படியும் அழைக்கலாம் (4)
13. காடுகளில் மரங்கள் ஒன்றுடன் ஒன்று வேகமாக உரசிக் கொண்டால் —— உண்டாகும் (4)
14. திரைகடல் ஓடி ——— தேடு (5)

- **சீ.கி. இராஜராஜேஸ்வரி,**
ஒன்பதாம் வகுப்பு, நாடார் சரஸ்வதி
பெண்கள் மே.நி.பள்ளி, தேனி.

விடை 64ஆம் பக்கம்

கிட்டப்பா குழியில்

உப்பு

அறிவியல் பாடவேளை. வேதியியலில் ஒரு பாடத்தை நடத்தி முடித்துவிட்டு மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார் ஆசிரியர். எங்கள் வகுப்பில் ஒரு மாணவன் கேள்வி கேட்கும்போதெல்லாம் பதில் தெரியாமல் எழுந்து நிற்பான். அவன் முறை வந்ததும், "உனக்காக மிக எளிய கேள்வி தருகிறேன்" என்ற ஆசிரியர் "சாதாரண உப்பின் வேதியியல் பெயர் என்ன?" என்று கேட்டார். அதாவது "நம் சாப்பாட்டில் சேர்க்கப்படும் உப்பின் பெயர்" என்றார் விளக்கமாக. அப்போதும் அந்த மாணவனுக்குப் பதில் தெரியவில்லை. விழித்தான். கோபமாகிப்போன ஆசிரியர், "எல்லோரும் டக்கென்று பதில் சொல்கிறார்களே... உனக்கென்ன வந்தது? வெட்கமாக இல்லை" என்று அவனைத் திட்டினார். அப்போது ஒரு மாணவன் எழுந்து "நீ சோடியம் குளோரைடைத்தானே போட்டுத் திங்கிறாய்" என்று கேட்க வகுப்பே சிரிப்பில் மூழ்கியது. கேட்டவன் வேறு யாருமல்ல, அந்த மாணவனின் பெரியம்மா மகன்தான்.

– ப. ராமகிருஷ்ணன்,
புதுக்கோட்டை.



எங்கள் பள்ளியில் நடந்தது!



குழி.குவி

பத்தாம் வகுப்பு படிக்கும்போது அறிவியல் பாடத்தில் கிட்டப்பார்வை, தூரப்பார்வை ஆகியவற்றிற்குக் குழிலென்ஸ், குவிலென்ஸ் இவற்றில் எதை உபயோகப்படுத்துவது என்பதில் யாருக்குமே குழப்பம் வரும். அதைச் சுலபமாக ஞாபகம் வைத்துக் கொள்ள எங்கள் ஆசிரியர் "கிட்டப்பா குழியில் விழுந்தான். அதாவது, கிட்டப் பார்வைக்குக் குழிலென்ஸ். ஒன்று தெரிந்தால் போதும். மற்றது சுலபமாக ஞாபகத்துக்கு வந்துவிடும்" என்றார். அதற்குப் பின் யாருக்கும் குழப்பம் வரவில்லை.

– ஏ.கே.நாசர்,
லெட்சுமாங்குடி.


பஞ்ச பாண்டவர்கள்

ஒருமுறை எங்கள் தமிழாசிரியர் மகாபாரதக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார். நடுவில் ஒரு மாணவன் எழுந்து, "ஐயா! 'பாண்டவர்கள்' சாப்பாட்டுக்கே ரொம்ப கஷ்டப்பட்டாங்களா?" என்று கேட்டான். ஆசிரியர், "என்ன உளர்றே! பாண்டவர்கள் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டாங்கன்னு உனக்கு யார் சொன்னது?" என்று கோபமாகக் கேட்டார். அதற்கு அம்மாணவன், "நீங்கதானே ஐயா சொன்னீங்க.. 'பஞ்ச' பாண்டவர்கள்"னு என்று கூறியதும் வகுப்பறையே சிரிப்பலையில் அதிர்ந்தது.

– ஆர். பிரசன்னா,
கரூர்.



விழுந்தான்!



வாய்...

எங்கள் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பாடத்தைக் கவனிக்காமல் ஒரு மாணவன் ஜாமெட்ரி பாக்ஸைத் திறக்கவும் மூடவுமாக இருந்தான். அதைப் பார்த்த ஆசிரியர் அம்மாணவனைப் பார்த்து "பாடத்தைக் கவனிக்காமல் ஜாமெட்ரி பாக்ஸைத் திறக்கவும், மூடவுமா இருக்கே. அதுக்கு வாயிருந்தால் அழுதிருக்கும்" என்று சொன்னார். ஒரு மாணவன் "அதுக்குக் கண் இருந்தால்தான் அழமுடியும் சார்" என்று சொல்லவும் வகுப்பில் ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.


— சி. இராஜசேகரன்
விருதுநகர்.

பணி செய்து...

ஒரு நாள் எங்கள் தமிழாசிரியர் செய்யுள் பகுதியை நடத்திக் கொண்டிருந்தார். அவர் மிகவும் நகைச்சுவை உணர்வு மிக்கவர். அப்போது ஒரு மாணவனை எழுப்பி, "என் கடன் பணி செய்து கிடப்பது என்று பாடியவர் யார்?" என்று கேட்டார். அந்த மாணவன் முந்தைய நாள் வராததால் தனக்குத் தெரியாது என்று கூறினான். உடனே அவர், "விடை தெரிந்த யாராவது ஒருவர் கூறுங்கள்" என்றார்.

உடனே, ராகவேந்திரன் என்ற குறும்புக்கார மாணவன் எழுந்து, "இதை எதாவது ஒரு ஐஸ் கம்பெனி முதலாளி பாடியிருப்பார் சார்" என்றான். உடனே அனைவரும் சிரித்து விட்டோம். பிறகு அவர் நான் கூறியது 'பனி' அல்ல 'பணி' என்று கூறியவுடன், அவன் மன்னிப்புக் கேட்டு விட்டு பதிலைக் கூறினான்.

— எம். வினோத்,
விருத்தாசலம்.



தொண்டைவலி!

ஒரு நாள் ஆசிரியர் "எனக்கு இது நான்காவது பீரியட். அதனால் மெதுவாகத்தான் பேச முடியும். கத்தி கத்தி தொண்டை வலிக்கிறது" என்றார். உடனே நான் எழுந்து, "சார், இது எங்களுக்கும்தான் நான்காவது பீரியட்" என்றேன். ஆசிரியர் சிரித்துவிட்டு பின்பு என்னைப் பார்த்து "நாங்கள்தானே பாடம் நடத்துகிறோம். நீயா நடத்துகிறாய்?" என்று சற்றுக் கண்டிப்புடன் கூறினார். நான் அமைதியாக அமர்ந்து விட்டேன். சிறிது நேரம் பாடம் எடுத்த பின்னர் ஆசிரியர் "தண்ணீர் கொடுங்கள்" என்றார். நான் பின்னால் இருந்த மாணவியின் பாட்டிலை வாங்கிக் கொடுத்தேன். ஆசிரியர் "பார்த்தீர்களா, என்னதான் திட்டினாலும் வினோதினிதான் தண்ணீர் கொடுக்கிறாள்" என்றார். உடனே நான் "சார் இது என்னுடையது இல்லை, கமலாவோடது" என்றதும் வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

— ந. வினோதினி, எட்டாம் வகுப்பு,
அரசினர் மகளிர் மேல்நிலை பள்ளி,
குரோம்பேட்டை, சென்னை.





விடுகதைப் பக்கம்

I 1) ஏறமுடியாத மரத்தில் எண்ணாயிரம் காய்கள் — அது என்ன?

2) கந்தல் துணியைக் கட்டிக் கொண்டு முத்துப் பிள்ளையைப் பெற்று மகிழ்ந்தாள் — அது என்ன?

3) அரைப்படி அரிசிபொங்கி ஆயிரம் பேர் உண்டு அரைக் கட்டி மிச்சம் — அது என்ன?

4) மஞ்சள்பட்டுடுத்தி மடிக்குள் பிள்ளை வைத்து கடைத் தெருவில் வீற்றிருப்பாள். கண்கவர்மயக்கும் ராணி — அது என்ன?

5) மஞ்சள் குருவி ஊஞ்சலாடும் மாதேவனுக்குப் பூசைக்காகும் — அது என்ன?

6) மூன்று முள்ளுக்குள்ளே.. முந்திரித் தோப்புக்குள்ளே... வைக்கோல் போருக்குள்ளே... கண்டெடுத்தேன்... வைரமணி — அது என்ன?

7) உச்சிக்கிளையில் ஒரு முழக்குச்சி ஊசலாடுது — எது என்ன?

8) குட்ட மரத்தில் கொட்டாப்புளி — அது என்ன?

9) முட்டையைப் பிய்க்கப் பிய்க்க முந்தானையே வருது — அது என்ன?

10) குண்டுச் சட்டியில் கெண்டைமீன். இது இல்லாமல் உணவு உள்ளே செல்லாது — அது என்ன?

— வி.ஆர். கிருத்திகா,
திருச்சி -14

II 1) உயர மரத்திலே, உச்சாணிக் கிளையிலே, தொட்டில் கட்டி ஆடுது — அது என்ன?

2) எப்போதும் படபடப்பு, ஏனோ இந்தத் தவிப்பு, கண்மணியைக் காப்பாற்றும் துடிப்பு — அது என்ன?

3) இரவு பகல் விழித்திருக்கும், எப்போதும் ஒலித்திருக்கும் - அது என்ன?

4) அந்தரத்தில் தொங்குதடி அழகழகாச் சொம்பு; அதற்குள் இருக்கிறது அமுதம் போல் தண்ணீர் — அது என்ன?

5) அடுப்பில் உலையும் கொதிப்பதேன்? அரிசிச் சாதம் ஆவதேன்? இலங்கை அன்று அழிந்ததேன்?

6) அடித்தால் விலகாது; அணைத்தால் நிற்காது — அது என்ன?

7) குலைகுலையாகக் காய்க்கும் வாழை அல்ல; கொடிமரம் போல் நிற்கும் பாக்கு மரமுமல்ல — அது என்ன?

— ஆ. சி. தியாகராஜன்,
மலேசியா

III 1) ஒரு சாண் குள்ளனுக்கு அரை சாண் குடுமி — யார் அவன்?

2) காவல் காப்பான் கன்னியப்பன். கவனம் தப்பினால் காலையும் கடிப்பான் கன்னியப்பன் — யார் அவன்?

3) சட்டையைக் கழற்றி ஊராருக்குக் கொடுத்துவிட்டு, சத்தமில்லாமல் போகிறான் — யார் அவன்?

4) அண்ணனும், தம்பியும் அடுத்தடுத்த வீட்டிலே குடியிருந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள மாட்டார்கள் — யார் அவர்கள்?

— சு. சௌம்யாயனி,
எட்டாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் ம.மே.நி. பள்ளி,
தூத்துக்குடி

விடைகள்:

I 1) கேழ்வரகு 2) சோளம் 3) சுண்ணாம்பு 4) மாம்பழம் 5) வாழைப்பழம் 6) பலாப்பழம் 7) முருங்கைக்காய் 8) கத்தரிக்காய் 9) வெங்காயம் 10) நாக்கு

II 1) குருவிக்கூடு 2) கண்ணிமை 3) கடிகாரம் 4) இளநீர் 5) நெருப்பால் 6) தண்ணீர் 7) தென்னை

III 1) தேங்காய் 2) முள் 3) பாம்பு 4) கண்கள்



அதிசய முட்டை!

எந்தப் பறவை இனமும் கூட்டில்
இதுவரை போடா முட்டை!
குந்தி இருந்து அடையும் காத்துக்
குஞ்சு பொரிக்கா முட்டை!


சிறுத்தும் பெருத்தும் பலவுருக் காட்டிச்
சிந்தை கவரும் முட்டை!
பொரித்தும் அவித்தும் உணவுடன் கூட்டிப்
புசிக்க முடியா முட்டை!

அண்டைப் பொருளின் பிம்பம் ஏற்று
அழகாய் ஒளிரும் முட்டை!
வண்ணக் கலவை சுமந்து காற்றில்
வலமாய் உலவும் முட்டை!

ஒன்றி ரசிக்கும் சமயம் பார்த்து
உடைந்து போகும் முட்டை!
சின்னக் குழாயால் கரைசல் சோப்பில்
சிறுவர் ஊதும் முட்டை!

- தளவை இளங்குமரன்

எங்கள் ஊரில் நடந்தது!



வேண்டாம்...!


தம்பிக்குப் பிறந்த நாள் கொண்டாடினோம். தம்பி கேக்கை வெட்டியவுடன் அவனுக்கு அதை அம்மா ஊட்டினார். உறவினர்கள் அனைவரும் பரிசுப் பொருள் கொடுத்து வாழ்த்தினர். மதியம் விருந்து நடந்தது. அனைவரும் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், ''இனி மேல் பிறந்தநாள் கொண்டாட வேண்டாம்'' என்று தம்பி சொல்ல, ''ஏன்?'' என்று அப்பா அதிர்ச்சியுடன் கேட்டார். ''இனிமேல் பிறந்த 'கிழமை' கொண்டாடுவோம். வாராவாரம் இதுபோல் மகிழ்ச்சியாக இருக்கலாமே'' என்று தம்பி சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

பொல் கடிக்குமா?

சூலம்

விடுமுறைக்கு ஊரிலிருந்து மாமா பெண்கள் வந்திருந்தனர். விடுமுறை முடிந்து ஞாயிற்றுக் கிழமை மாலை கிளம்பி வருமாறு' மாமா தொலைபேசியில் கூறிவிட்டார். அவர்களுக்கோ சன் டீ.வியில் சூலம் மெகா சீரியல் பார்க்க முடியாமல் போகிறதே என்ற கவலை! எங்கள் அம்மாவிடம், "சூலம் பார்த்துட்டுப் போகிறோமே!" என்று கெஞ்சினர். அதற்கு அம்மா, "சூலம் பார்த்தா நாழியாயிடும்" என்றார். இந்த விவரம் புரியாமல் பாட்டி, "சூலம் பார்க்க ஏன் நாழியாகுது? காலண்டரை எடுத்து ஒரு நிமிஷத்தில் பார்த்துடலாமே" என்றதும் வீடே சிரிப்பில் அதிர்ந்தது.





_ எஸ். கவிதா, திருநெல்வேலி.

பாட்டி... பாட்டி...

"எங்கள் பாட்டி உடல் நலமின்றி இருந்ததால் மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். ஒருநாள் டாக்டர் ரவுண்ட்ஸ் வந்தபோது என் பாட்டி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். டாக்டர் பாட்டியை மெல்ல தொட்டு, "ஏங்க பாட்டி, ஏங்க பாட்டி" என கூப்பிட, அருகில் நின்று கொண்டிருந்த என் நான்கு வயது தங்கை, "டாக்டர் அது உங்க பாட்டி இல்லே, எங்க பாட்டி" என்று கூறினாள். டாக்டர், அருகிலிருந்த நர்ஸ் உட்பட அனைவரும் சிரித்துவிட்டனர்.


- ப. சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல் நிலைப்பள்ளி, சென்னை.





மறை... முறை

வீட்டில் அனைவரும் அமர்ந்து 'டீ.வி' பார்த்துக்கொண்டிருந்தோம். எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த என் தம்பியை நான் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தபோது, அவன் என்னைக் கோபமாகப் பார்த்தான். நான் அவனிடம், ''ஏன் முறைக்கிறே?'' என்று கேட்டேன். அவன், ''நீ மறைக்கிறே'' என்றான். எனது கேள்வியும் அவனது பதிலும் எதுகை, மோனையில் அமைந்ததால் அனைவரும் சிரித்துவிட்டோம்.



- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

பெயர் மாற்றம்!

நானும், அப்பாவும் அவர் நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவர் மகன் ஏதோ கேட்டு அவர்கள் மறுக்கவே சாப்பிடாமல் அடம் பிடித்தான். அதற்கு அவர்கள் ''ஜவஹர் எப்போதும் அப்படித்தான், கேட்டது எதுவும் கிடைக்கவில்லை எனில் உடனே சாப்பிடாமல் அடம் பிடித்து அதனை அடைந்த பிறகுதான் சாப்பிடுவான்'' என்று கூறினார்கள். அதற்கு ''அப்படியா தம்பி'' என்று அப்பா கேட்டார். அவனும், 'ஆமாம்' என்பதுபோல் தலை அசைத்தான். ''அப்படியானால் இன்றிலிருந்து உன் பெயரை 'ஜவஹர்' என்பதற்குப் பதில் 'காந்தி' என்று மாற்றிக் கொள். காந்திஜி எந்த ஒரு விஷயமானாலும் உடனே உண்ணாவிரதத்தை மேற்கொண்டுதான் வெற்றி பெறுவார்'' என்று கூறினார். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான். பின்னர் மற்றவர்கள் விளக்கம் தரவே 'அப்படியா' என்று கேட்டுச் சிரித்தான்.


- டி. பரதன், விளமல், திருவாரூர்.

எங்கள் ஊரில் நடந்தது!

கடி

சமீபத்தில் உறவினர் வீட்டிற்குச் சென்றோம். அவரிடம் 'ஜிம்மி' என்று ஒரு உயர்வகை நாய் இருந்தது. என் தங்கை மினு அந்த நாயுடன் விளையாடிக் கொண்டு இருக்கையில் நாயின் வாலைப் பிடித்து இழுத்தாள். அதைக் கவனித்த என் அப்பா ''மினு! நாய் வாலைப் பிடித்து இழுக்காதே. அது கடிக்கும்'' என்றார். உடனே மினுவோ, ''போங்கப்பா! நாய் வால் எங்கேயாவது கடிக்குமா?'' என்றாள். நாங்கள் சிரித்த சிரிப்பில் நாய் ஓடிவிட்டது.

எம். வினோத்,
விருத்தாசலம்.



சின்னமனூர் சின்னப் பட்டாளம்



2. காரில் யார்?

பெருமரங்கள் மண்டிக் கிடந்த தோட்டத்தின் உள்ளே புதைந்தது போல் இருந்தது அந்த வீடு. நாட்டு ஓடு வேய்ந்த வீடுதான், எனினும் நீண்ட திண்ணைகளுடன் மிகப் பெரியதாக, சகலவசதிகளுடன் இருந்தது.

முன்னால் விரிந்து கிடந்த பெரிய வராண்டாவின் மையத்தில் போடப்பட்டிருந்த, பிரம்பு நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்திருந்தார் பண்ணையார் பரமானந்தம்.



ரா. சுந்தரமூர்த்தி

அவர் முன் கைகளைக் கட்டிக் கொண்டு, தலை கவிழ்ந்து நின்றிருந்தனர் நான்கு பேர். அவர்கள் தோற்றத்திற்கும் நிற்கும் தோரணைக்கும் பொருத்தமில்லை.

சூழ்நிலை மிக அமைதியாக இருந்தது. சூழலின் இறுக்கம் புரிந்து விட்டது போல் காக்கைகள் கூட கரையவில்லை. கடைசியாக நின்றிருந்த கருப்பன்தான் வாய் திறந்து "ஐயா..." என்று இழுத்தான்.

''என்னடா ஐயா.. நொய்யா" என்று சீறி விழுந்தார் பரமானந்தம்.

"இல்லீங்கய்யா அந்தப் பூனை..."

விருட்டென எழுந்தார் பரமானந்தம். "என்னடா பேச்சுப் பேசறீங்க?" குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அவரது கோபம் நடையில் தெரிந்தது.

நான்கு பேரும் சப்த நாடியும் நடுங்க மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தனர்.

பரமானந்தமே தொடர்ந்தார்: "என்னடா பூனை பூனைங்கறீங்க? அந்தப் பூனை கத்தினது ரோட்ல போறவன், வயல் வேலை செய்தவன் காதிலெல்லாம் விழுந்து வந்து பார்க்கிறான். பக்கத்தில் நின்ன உங்க காதில் விழ



லையா? அது விழுந்த உடனே நீங்க, அந்தக் கழுதையை வெளியே தூக்கிப்போட்டி ருக்கலாமில்லை. இது கூட செய்ய துப்பு இல்லாம என்னடா செஞ்சிட்டு இருந்தீங்க அங்கே?"

பதில் எதுவும் சொல்லத் தெரியாதவர்களாக முழித்த படி, அவர் முகத்தைப் பரி தாபமாக ஏறிட்டுப் பார்த்த னர்.

"சரக்கு வந்திருக்கிற அன்னிக்கு நீங்க இப்படி கவனமில்லாம நின்னுருக்கீங் களே, பசங்க பூனையைத் தூக்க கிணத்துல இறங்கி இருந்தால் என் நிலைமை என்னடா? நினைச்சு பார்த்தீங்களா? என்னை விடுங்க. மேலிருந்து உத்திரவு போட்டுக்கிட்டு இருக்கானே, அவனுக்கு இது தெரிந்தால் உங்க நிலைமை என்ன தெரியுமா?"

உறுதியான உடல் கட்டுடன் இருந்தாலும் அந்த முரட்டு மனிதர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட 'கிலி'யில் தேகம் நடுங்கியது.

"ஐயா இந்தத் தடவை மட்டும் மன்னிச்சி ருங்க... இனி தப்பு நடக்காது" என்று கெஞ்சி னர்.

"இப்படி கேட்க உங்களுக்கு வெட்கமா யில்லை. போங்கடா... போங்கடா...போய் ஆக வேண்டியதைப் பாருங்க. இன்னொரு தரம் ஏதாவது ஏடா கூடமா நடந்தது, தொலைச்சிடு வேன். சொல்லிட்டேன்" என்று உறுமிய பரமா னந்தம், களைத்தவராய் பிரம்பு நாற்காலியில் விழுந்தார். அதில் போட்டிருந்த குஷன் இருக்கை அவரை உள்வாங்கிக் கொண்டது.

நான்கு பேரும் வெளியே தெரியாமல், பெருமூச்சு விட்டனர். உடல் சோர்வு நீங்கியது போல் இருந்தது. ஆனாலும் அவர்கள் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அசையாமல் நின்றவர்களைப் பார்த்து மீண்டும் பேசினார் பரமானந்தம்.

"இன்னும் ஏண்டா நிக்கறீங்க...? போய்த் தொலைங்க."

கசாப்பு கடை பந்தலில் இருந்து அவிழ்த்து விடப்பட்ட ஆடுகளின் சந்தோஷம் அந்த நான்கு பேர் முகத்திலும். ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசாமலேயே மகிழ்ச்சியையும் திருப்தியையும் பரிமாறிக் கொண்டு நடந்தனர்.

ஒரு பூனையின் பரிதாபக் குரலை அலட்சி யப்படுத்தியதற்கு இத்தனை தொல்லைகளா? அவர்களால் நம்ப முடியவில்லை. ஆனால் அது தானே உண்மை?

பேசி வைத்தபடி மாலை 4 மணிக்குத் தென்னந்தோப்பு 'மோட்டார் பம்ப்' கொட்ட கைக்கு ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். உதாரணம் மட்டும் வரவில்லை. அவன் இல் லாமலேயே கூட்டத்தைத் தொடங்கி விடலாம் என்று ஆளாளுக்கு அபிப்ராயம் சொன்னார் கள்.

"கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்" என் றான் கிட்டான்.

எல்லோர் முகத்திலும் பரபரப்பும் பதட்டமும் தெரிந்தது. ஒரு முக்கியச் செய்தியைச் சொல் லப் போவதாகக் கிட்டான் சொல்லி இருந்தான். என்ன அது என்பதைத் தெரிந்து கொள்வதில் எதிர்பார்ப்புடன் இருந்த நண்பர்களுக்கு, உதார ணத்தின் தாமதம் எரிச்சலைக் கிளப்பியது.

முத்துக்குமாரின் காதோடு கிசுகிசுத்தாள் சிட்டழகு. "இங்கு நாம் எதுக்குக் கூடியிருக் கோம்? உனக்கு ஏதாவது தெரிந்தால் எனக் கும் சொல்லேன்."



உதட்டைப் பிதுக்கினான் முத்துகுமார். ஆனாலும் பதிலுக்குக் கிசுகிசுப்பான குரலில் "ஒன்றை யூகிக்கலாம். கிட்டான் அய்யனார் கோயில் கிணற்றில் பார்த்தது பூனையை மட்டுமல்ல; வேறு ஒன்றும். அது பற்றி அவன் தான் சொல்ல முடியும்."

அதைக் கேட்டதும் சிட்டழகு முகத்தில் தூண்டிய விளக்கைப் போல் பிரகாசம் ஏற்பட்டது.

"அப்படியா?" என்றாள். அவளது ஆச்சரியத்தால் குரல் கிசுகிசுப்பில் இருந்து ஓங்கி விட்டது.

உடனே செந்தில் "என்ன அப்படியாங்கறே" என்றான்.

"ஆரம்பிச்சிட்டீங்களா உங்களுக்குள்ளேயே" என்றான் கிட்டான்.

"இல்ல இல்ல... ஒண்ணுமில்ல..." சிட்டழகு மறுத்தாள்.

அதற்குள் தோப்பு முனையில் ஆள் அரவம் கேட்கவே, எல்லோரும் கொட்டகையில் இருந்து வெளியே எட்டிப் பார்த்தனர்.

உதாரணம்தான் பம்மியபடி பயந்தவனாய் வந்து கொண்டிருந்தான். முத்து வெளியே ஓடிப்போய் "வாடா வேகமாக; இப்பத்தான் கொல்லையை அளக்கறான். எல்லோரும் வந்து நேரமாச்சுல்ல" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான்.

கொட்டகைக்குள் நுழையும் போதே "சாரிப்பா, அப்பா வீட்டிலேயே இருந்தார். அவர் வெளியே கிளம்புற வரைக்கும் புறப்பட முடியலை. அப்படியே புறப்பட்டால் எதுக்கு, எங்கேன்னு கேள்வி கேட்பார். அதனாலதான்" என்றான் பணிவாக.

"சரி பரவாயில்ல உட்கார்" என்றான் கிட்டான்.

எல்லோரும் அவன் முகத்தையே பார்த்தனர்.

ஒருமுறை கொட்டைக்கு வெளியே வந்து நோட்டம் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தான் கிட்டான்.

"அய்யனார் கோயில் கிணத்துல பூனையோடு ஒரு மூட்டை கிடப்பதையும் பார்த்தேன்" என்றான்.

"நிஜமாவா?" என்றான் செந்தில்.

"ஆமாம். அது பேக் செய்திருந்த விதம் கொஞ்சம் வித்தியாசமானது. நம் ஊரில் கட்டினது இல்லை. அது தான் என் சந்தேகத்துக்குக் காரணம்" என்றான்.

"அதுக்கென்ன இப்போ?" என்றான் உதாரணம்.

"அப்பவே நானும் நினைத்தேன். நாம பூனையைக் காப்பாற்றினால் அவங்களுக்கென்ன என்று. நீ சொன்ன பிறகுதான் புரியுது. அதில் ஏதோ சூட்சுமம் இருக்குன்னு." முத்து.

"அதுக்கு இப்போ நாம என்ன செய்யணும்?" என்றாள் சிட்டழகு, முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு.

"இதிலே நாம செய்ய என்னயிருக்கு? கிணத்துல மூட்டையைப் போட்டவங்க எடுத்துப்பாங்க" என்றான் உதாரணம்.

கிட்டான் அவனை முறைத்துப் பார்த்தான். "அதில் நமக்குப் பங்கு வேணும்னு யாரும் சொல்லலை. அந்த மூட்டையில் என்ன இருக்கு? எதுக்கு கிணத்துல போட்டு ஒளிச்சு வைக்கணும்? அதுக்கான அவசியம் என்ன, அப்படிங்கிறதுதான் கேள்வி."

"கிணத்துல மறைச்சி வச்சிருக்கிற பொருள் யாருக்கும் தெரிந்து விடக் கூடாதுன்னுதான் பூனையை எடுக்க விடாமல் விரட்டினாங்க. அப்படின்னா அந்த மூட்டையில் ஏதோ மர்மம் இருக்குன்னு அர்த்தம். அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமுன்னு நினைக்

கிறேன்" நீண்ட விளக்கம் போல் பேசினான் கிட்டான்.

எல்லோரும் அவன் பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"மூட்டை இன்னும் அங்கேயே கிடக்குமா?" என்றாள் சிட்டழகு.

"நீ கேட்பது சரிதான். மூட்டை கிணத்துக் குள்ளே கிடக்குமுன்னு சொல்ல முடியாது. அந்த மூட்டையை நாம் பார்த்து விட்டோம் என்று தெரிந்தால் அவசரமாக அப்புறப்படுத்தி இருப் பாங்க. இல்லைன்னா பிரச்னையில்லை. அவங்



"என் மூளைக்கு விடப்பட்ட சவாலாக இந்தப் புதிரை நான் நினைக்கிறேன்!"
"ஏன்டா, இல்லாததையெல்லாம் நினைச்சு கவலைப்படறே?"
– ந. இராமன்

களுக்கு எப்போ தேவையோ அப்பத்தான் எடுப் பாங்க" என்றான் கிட்டான்.

"பூனையைப் பார்க்கவே நம்மை பண்ணை யார் ஆட்கள் விடலை. மூட்டையைப் போய் பார்க்க விடுவாங்களா என்ன?" என்றான் உதாரணம்.

"ஆமாம், நாம போய் அவங்கக்கிட்ட அனுமதி கேட்டுகிட்டா உள்ளே இறங்கிப் பார்க் கப் போறோம்? இவனைப் பாருடா" கிண்டலடித் தான் செந்தில்.

"அப்புறமென்ன திருட்டுத்தனமாகவா?" அதிர்ச்சி அடைந்தவனாய் கேட்டான் உதார ணம்.

"திருட்டுத் தனமாய் இல்லடா, ரகசியமாக" என்றான் முத்துக்குமார்.

"ராத்திரின்னா நான் வரமாட்டேன். பகல் லேயே அங்கெல்லாம் போக பயமா இருக்கும்" என்றான் செந்தில்.

"சரி, சரி. கொஞ்சம் அமைதியாய் இருங்க நண்பர்களே, முதலில் நாம் செய்ய வேண்டியது என்னன்னா அய்யனார் கோயிலை வேவு பார்ப் பதுதான். மூட்டையை எடுப்பது அல்ல" என்றான் கிட்டான்.

"வேவு பார்க்கிறதா?" உதாரணம்தான் மறுபடியும் கேட்டான்.

"ஆமாண்டா. இவனுக்கு எல்லாமே விளக்க மாகச் சொல்லணும். வேவு பார்க்கிறதுன்னா கண்காணிப்பது அவ்வளவுதான்!" என்றான் முத்துக்குமார்.

"எப்படி என்பதை எல்லாம் மீண்டும் வேறு ஒரு இடத்தில் கூடிப் பேசலாம். இப்போதைக்கு நாம புறப்படுவோம். இன்னும் கொஞ்ச நேரத்துல தண்ணி காட்ட ஆட்கள் வந்திருவாங்க. மோட் டார் போடவும் ஆள் வந்திடும்" என்றான் கிட்டான்.

"அப்போ இன்னிக்கு இவ்வளவுதானா?" என்றாள் சிட்டழகு.

கிட்டான் அவள் தலையில் செல்லமாய் ஒரு குட்டு குட்டினான். "ஆமாம் இவ்வளவுதான். மறுபடியும் நாளை சந்திக்கலாம். அய்யனார் கோயிலைக் கண்காணிப்பது எப்படிங்கற ஐடியாவுடன் வாங்க" என்றான்.

சிறுவர்கள் மோட்டார் கொட்டகையில் இருந்து வெளியே வந்தனர். சூரியன் மேற்கே ரொம்பவும் கீழே இறங்கி இருந்தான். கூடு திரும்பும் பறவைகளின் 'கீச் மூச்' சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

தூரத்தில் தோளில் மண் வெட்டியோடு, தண்ணி மடை திறக்கும் ஆட்களின் நடமாட் டம் தெரிந்தது.

"சரி நான் வரேண்டா" முதலில் உதாரணம் தான் 'ஜுட்' விட்டான்.


மற்றவர்கள் கிசுகிசுப்பாய் பேசியபடி வந் தனர். முத்துக்குமாருக்குப் பக்கத்து தெருதான். அவன் விடை பெற்றுக் கொண்டு போனான்.


சிட்டழகு, செந்தில், கிட்டான் மூவரும் ஒரே தெரு வாசிகள். அவர்கள் தங்கள் தெரு முக்கில் திரும்பிய போது, ஒரு கார் படுவேக மாக உள்ளே இருந்து வந்து தெரு முனையில் திரும்பியது. அதில் இருந்த நபரைக் கண்டு மூவரும் திடுக்கிட்டனர்.

(தொடரும்)

உங்கள் நினைவாற்றல் எப்படி?

இந்தப் படத்தை 3 நிமிடம் உற்றுப் பாருங்கள். பிறகு 56ஆம் பக்கத்துக்குச் செல்லுங்கள். அங்கு கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, கைக்கடிகாரப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

மணக்கும் பூண்டு!

'சுகந்தம் திட்டிரம்' என்றால் என்ன? மணம் பரப்பும் பூண்டுக்குத்தான் தமிழில் இந்தப் பெயர். சாதாரணமாகப் புழக்கத்தில் 'வெள்ளைப் பூண்டு', 'உள்ளிப் பூண்டு' என்று அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் கார்லிக். இதன் தாவரவியல் பெயர் அல்பினியா காலங்கா. 'பூண்டு' என்பது அத் தாவரத்தின் வேர்த்தண்டே! பூண்டு இமயமலைப் பகுதிகளிலும், இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளிலும் அதிகமாக விளைகிறது.

வெங்காய இனத்தைச் சேர்ந்த பூண்டு உணவுக்குச் சுவையூட்டும் நறுமணப் பொருளாகவும் பல நோய்களைத் தீர்க்கும் நிவாரணியாகவும் உலகம் முழுவதும் வலம் வருகிறது. இந்தியாவில் 42, 000 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு, பெரும்பகுதி அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது.



செடி, கடின வேர்த்தண்டும், மெல்லிய இலைகளும் உடையது. ஒரு பூண்டில் 6 முதல் 30 பற்கள் வரை இருக்கும். பூண்டு முதிர 4 – 5 மாதங்கள் ஆகும். தென்னிந்தியாவில் கேழ்வரகு, மிளகாய், சோளம், பீன்ஸ் மற்றும் உருளைக் கிழங்குடன் பூண்டு மாற்றுப் பயிராகப் பயிரிடப்படுகிறது.

பூண்டில் 'பெளவரி' மற்றும் 'ராஜுள்ளே கட்டி' என்ற வகைகள் தவிர வேறு இனங்கள் அவ்வளவாக இல்லை. பெல்லாரி மாவட்டத்தில் விளையும் பூண்டு வெண்மையாகவும், பெரிதாகவும் இருக்கும். இந்தியாவில் ஜாம் நகர் பூண்டுதான் உருவத்திலும், தரத்திலும் பிரசித்தி பெற்றது. நல்ல காரமும் சிறந்த பூச்சிக் கொல்லியாகவும் திகழ்வது ஜாம்நகர் பூண்டுகளே!

பயிரின் நுனிப் பகுதி மஞ்சளாவதை வைத்து பூண்டின் உலரும் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம். இலைகள் உதிர்ந்த பின் பூண்டை எடுத்து 3 – 4 நாட்கள் பதப்படுத்திய பின்பு விற்பனைக்கு அனுப்பப்படும்.

பூண்டின் மணத்திற்குக் காரணம் அதிலுள்ள அல்லிசின் அல்லது அலைல் சல்பைடு என்ற வேதி பொருளே! பூண்டிலுள்ள கால்சியம் ஸ்டியரேட் என்ற வேதிப் பொருள் 2 சதவீதம் மட்டுமே இருந்தாலும் இது மிகச்சிறந்த பாக்டீரியா கொல்லி. எல்லா மருத்துவத்திலும் பூண்டு முக்கியப் பங்கு வகிக்கிறது.


கி.பி. 1750 ஆம் ஆண்டுகளிலேயே பூண்டை காலராவுக்கு எதிர்ப்பு மருந்தாகப் பயன்படுத்தியுள்ளனர்.


ஈ, வண்டு மற்றும் கொசுக்களின் லார்வாக்களை அழிக்க பூண்டு சிறந்த பூச்சிக் கொல்லியாகச் செயல்படுகிறது என்று பாபா அணுசக்தி கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூண்டை சர்வரோக நிவாரணி என்றே அழைக்கலாம். ஏனெனில் இது வயிற்று வலி, வயிற்றுப் புண், வயிற்றுப் போக்கு, தோல் வியாதி, காது வலி போன்றவற்றை குணமாக்குகிறது. மேலும் ஆஸ்துமாவைச் சரி செய்யவும், உடல் கொழுப்பு, மன அழுத்தம், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் மலிவான மருந்து பூண்டே. அத்துடன் இரத்தக் குழாயிலுள்ள அடைப்பைக் கரைத்து மாரடைப்பு வருவதைத் தடுத்து நிறுத்துகிறது.

பூண்டைப் பச்சையாகச் சாப்பிட்டாலும் வேக வைத்து சாப்பிட்டாலும் அதன் மருத்துவ குணம் குறைவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

— எஸ். மோகனா




பாகிஸ்தான்
நாட்டுபுறக் கதை
சமையல் குறிப்பு
அமைப்பு : மோகன் .சி
படம் : அஜயன்
ஒரு நாள் பாக்லால் தன் அத்தை வீட்டிற்குச் சென்றான்.
அத்தை, இந்தக் கோழிக்கறி ரொம்ப சுவையாக இருக்குது! எப்படி செஞ்சீங்க?
எப்படி செய்யணுங்கிறதை எழுதித் தரேன்.
சமையல் குறிப்புக் காகிதத்தை மடித்து பையில் வைத்துக் கொண்டு, வீடு நோக்கி நடந்தான்.
சீக்கிரமாக வீட்டுக்குப் போய் கோழிக்கறி சமைக்கணும்.
வழியில் ஒரு பெரிய கோழியை விலை கொடுத்து வாங்கினான்.
இந்தக் கோழி விரைவில் அருமையான உணவாகப் போகுது.
அப்போது ஒரு கழுகு பறந்து வந்தது.
MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
அச்சச்சோ! கோழியைக் கழுகு பறிச்சிட்டுப் போகுதே!



பாக்லால் மனம் தளரவில்லை. மீண்டும் கோழிக் கடைக்குச் சென்றான்.
காகிதத்தில் சுற்றி இன்னொரு கோழி கொடுங்கள்.
சரி.
மறுபடியும் கோழியுடன் நடக்க ஆரம்பித்தான் பாக்லால்.
அடுத்த கணம் கழுகு வந்து கோழியைப் பறித்துச் சென்றது.
ஹா....ஹா...
கழுகு கோழியைத் தூக்கிச் சென்றதுக்கு எதற்காகச் சிரிக்கறே? நீ என்ன பைத்தியமா?
சரியான முட்டாள்.
இல்லை... ஹா...ஹா... நான் பைத்தியம் இல்லை. அந்தக் கழுகு தான் முட்டாள்.
ஹா....ஹா.... ஹா....ஹா....
கழுகு கோழியை மட்டும் தானே தூக்கிச் சென்றது. அதுக்கு எப்படி சமைக்கணும்னு தெரியாதே! சமையல் குறிப்பு எங்கிட்டதானே இருக்கு. சரியான முட்டாள் கழுகு.
அடப் பாவி!

பால்ஷிக தேசத்தில் பகுதான்யம் என்ற அந்தண புரத்தில் பிரம்மசர்மா தன் மனைவி சுசீலையுடன் வசித்து வந்தார். அவர் வேத சாஸ்திர விற்பன்னர். அந்த ஊரிலும், சுற்று வட்டாரத்திலும் அவரையே யாக ஹோமாதிகளுக்கு அனைவரும் அழைத்தனர்.

மற்ற அந்தணர்களை அழைத்தால் பிரம்மசர்மா கோபப்பட்டு அவர்களது வீட்டு விஷயங்களை அம்பலப்படுத்துவார். இதனால் மற்ற வேதியர்கள் திதி காரியங்களை நடத்திக் கொடுக்க பின்வாங்கினர்.

இதனால் அவருக்கு நல்ல வருமானம். நிலம் வாங்கி அதில் தானே உழுவார். விதை விதைப்பார். மாடு வாங்கி பால், தயிர், மோர், வெண்ணெய் என்று நாலா விதத்திலும் சம்பாதித்தார். அதில் ஒரு பெரிய வீடு கட்டினார்.

இப்படி இருந்தும் மகா கருமியாக இருந்தார். வீட்டில் நல்ல சமையல் இல்லை. பிள்ளைகளைப் படிக்க வைக்கவில்லை. தினமும் வற்றல் குழம்பும், சுட்ட அப்பளமும்தான்! பணத்தைப் பவுன்களாக மாற்றி பூமிக்குள் சுரங்க அறை கட்டிப் புதைத்து வைத்திருந்தார்.

தினமும் அவர் மட்டும் கல்யாணம், பிறந்த நாள், திதி, புண்யாக வசனம், உபநயனம் என்று யார் வீட்டிலாவது அறுசுவை விருந்தை உண்டு விடுவார். எவர் வீட்டிலும் எந்த விசேஷமும் இல்லாவிடிலும் சாப்பாட்டு நேரத்தில் வசதியானவர் வீட்டிலே நுழைந்து அதை இதைப் பேசி சாப்பாட்டுக்கு அவர்கள் அழைக்கும்படி செய்துகொள்வார்.

விற்கும் பால், தயிரில் ஒரு சொட்டுக் கூட பிள்ளைகள் சாப்பிட அனுமதிக்க மாட்டார்.

தோல் கொடுத்த அரச மரங்கள்!


சுசீலை மிகவும் பொறுமைசாலி. வீட்டு வாசலில் சமித்துக்காக இரு அரசமரங்களை வளர்த்திருந்தார் பிரம்மசர்மா. அவற்றைத் தினமும் அஸ்வத்த ஸ்தோத்திரங்களைச் சொல்லி பிரதட்சிணம் செய்வாள். கோலமிட்டு, விளக்கேற்றி நமஸ்கரிப்பாள். பிள்ளைகளையும் பக்தியில் ஈடுபடுத்தினாள்.

ஒருநாள் சோள அடை செய்திருந்தாள். தினமும் அறுசுவை உணவுண்டு அலுத்திருந்த பிரம்ம சர்மாவுக்கு அது தேவாமிர்தமாக இருந்தது.

"ராத்திரிக்கும் இதையே பண்ணு" என்றார்.

யாரோ சிரிக்கும் சத்தம் சுசீலைக்குக் கேட்டது.

"சிரித்தது யார்? நான் கற்புடையவள், பெரியோர் வார்த்தைகளை மீறாதவள், பக்தி கொண்டவள் என்பது சத்தியமானால் சிரித்தவர் என் கண்களுக்குத் தென்பட வேண்டும். நான் வழிபடும் சிவன் மேலாணை" என்றாள்.



சித்ரகுப்தன் அவள் முன் தோன்றினார்.

"ஐயா! தாங்கள் யார்? எதற்காக நகைத்தீர்கள்?" என்று கேட்டாள்.

"அம்மணி, நான் யமனின் கணக்கனான சித்ரகுப்தன். உன் புருஷன் சற்று நேரத்தில் மடியப்போகிறான். இரவு ஆகாரத்தைப் பற்றி திட்டமிடுகிறானே என்று

சிரித்துவிட்டேன்" என்றார்.

சித்ரகுப்தனை நமஸ்கரித்த சுசீலை, "பிரபு! என் கணவரின் ஆயுளை நீட்டிக்க வழியொன்று கூறியருள வேண்டும்" என்று கோரினாள்.

"அம்மா! நீ செய்த துலாக்காவேரி ஸ்நானத்தின் ஒரு மாத புண்ணிய பலனைத் தானமாகக் கொடுத்தால் உன் கணவரின் ஆயுள் நீடிக்கும்" என்றார் சித்ரகுப்தர். அப்படியே நீர்வார்த்துத் தானம் செய்தாள் சுசீலை.

"பெண்ணே! என் தலைவரிட்ட கட்டளையை நான் நிறைவேற்றியே ஆக வேண்டும். உன் பதியின் ஜீவனை நான் யமலோகம் கொண்டு சென்று திரும்ப இரண்டரை மணி நேரம் ஆகும். அதுவரை உன் புருஷனின் உடலைக் காத்திரு" என்றார் கணக்கர்.

இந்த உரையாடல்கள் எதுவுமே பிரம்மசர்மாவின் காதுகளில் விழவில்லை. சித்ரகுப்தரின் உருவமும் அவர் கண்களில் படவில்லை! சோள அடை தொண்டையில் சிக்கிக் கொண்டு விக்கலெடுக்க அவர் தரையில் சாய்ந்தார்.

யமலோகத்தில் இருவர் பிரம்மசர்மாவை வழிமறித்தனர். "பாவி! எங்களிடம் செருப்புத் தைத்து போட்டுக் கொண்டு காசு கொடுக்காமல் ஏமாற்றிய வஞ்சகனே!" என்று நையப் புடைத்தனர். தடுக்க முயன்ற சித்ரகுப்தர் தோற்றார்.

"இந்த லோகத்தில் எதைக் கொடுத்தால் உங்கள் கடன் தீரும்? அதைச் சொல்லுங்கள்" என்று கேட்டார் பிரம்மசர்மா.

"தோலுக்குப் பதில் தோல்தான். உன் தோலை உரித்து எடுத்துக் கொள்கிறோம்" என்றனர்.

அப்போது இரு வலிமையுள்ள பிரம்மச்சாரிகள் அவர்கள் முன் தோன்றி, ""அவரை விட்டு விடுங்கள். எங்கள் தோலை உரித்துக் கொள்ளுங்கள்" என்று மரம் போல் நின்றனர். அவர்களது தொடையிலிருந்து தோலை உரித்து எடுத்துக் கொண்டவர்கள் அங்கிருந்து அகன்றனர்.

பிரம்ம சர்மா "நீங்கள் யார்? நீங்கள் எதற்கு எனக்காகத் தோல் கொடுத்தீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"நாங்கள் உங்கள் வீட்டு வாசலில் நிற்கும் அஸ்வத்த விருட்சங்கள். சமித்துக்காக எங்களை நீர் ஊற்றிக் காப்பாற்றினீர்கள். உங்கள் மனைவி தினமும் கோலமிட்டு, விளக்கேற்றி, வலம் வந்து நமஸ்கரித்த புண்ணியத்தால் தாங்கள் தோலுரிந்து வரக்கூடாது என்று உதவினோம்" என்று கூறி மறைந்தனர்.

சித்ரகுப்தர் "பார்த்தாயா! நாம் செய்யும் தானதர்மங்களும், புண்ணியமுமே தக்க நேரத்தில் காக்கும். யமனைப் பார்த்ததும் இந்த யமஸ்தோத்திரத்தைக் கூறி அவரை திருப்திப் படுத்து" என்று யமஸ்லோகத்தைச் சொல்லிக் கொடுத்தார். அப்படியே செய்தார் பிரம்மசர்மா.

ஆர். பொன்னம்மாள்

யமதர்மனும் மகிழ்ந்து சித்ரகுப்தன் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து பிரம்மசர்மாவின் உயிரை விடுவித்தார்.

உறவினர்களிடையே கட்டையாகக் கிடந்த பிரம்ம சர்மா தூங்கி விழித்தது போல் எழுந்தார். மனைவி




சுசீலையைக் கொண்டாடினார். தன் கஞ்சத் தனத்தை விடுத்து தான தருமங்கள் செய்தார். பிள்ளைகளுக்கு வேத சாஸ்திரங்களைக் கற்பித்தார். வாசலில் தோலுரிந்து நின்ற அரச மரங்களைச் சுசீலைக்குக் காட்டி யமலோகத்தில் நடந்தவற்றைக் கூறினார். முன்னிலும் அதிக பக்தியுடன் தம்பதிகள் அந்த அரசமரங்களை வழிபட்டனர்.



என்ன செய்கிறார்கள்?
1
2
3
4
ஜெ...


5
6
7
8
9
இவர்களின் செய்கைகளைப்
பாருங்கள். இவர்கள் என்ன செய்கிறார்கள்
என்பதைக் கண்டுபிடியுங்கள்.
விடை : 55-ஆம் பக்கம்

I







கோடை விடுமுறைப் போட்டி-I


என்ன பழமொழி?

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு தெரு,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.











II

இங்கு இரண்டு தொகுதிகளாக 19 படங்கள் உள்ளன. முதல் தொகுதியில் இருக்கும் படங்களின் முதல் எழுத்தையும் இரண்டாவது தொகுதியில் இருக்கும் படங்களின் இரண்டாவது எழுத்தையும் எடுத்து எழுதுங்கள். இந்த எழுத்துகளைச் சரியாக வரிசைப்படுத்தினால் ஒரு பழமொழி கிடைக்கும். அந்தப் பழமொழியைக் குறிப்பிட்டு, முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 10 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 15.5.2002.

கதை : ராஜி   படம் : லலிதா

21. ஆளப்பிறந்தவன்




ஜெயசிம்மனை நான் அழைத்துக் கொண்டு கூடாரத்தின் வாசலுக்கு வந்ததும் ஒரு சங்கு ஊத வேண்டும். அது வில் ஏந்திய நமது வீரர்களுக்கு எச்சரிக்கை.
உடனே விஷம் தோய்ந்த அம்புகள் பாய்ந்து ஜெயசிம்மனின் உயிரைப் பறிக்க வேண்டும். என்ன புரிந்ததா?
இம்முறை வெற்றி நிச்சயம்.


அரண்மனையில் பிரபாகரன் -
ஐயா! உங்களுக்கு ஒரு அவசரச் செய்தி!
பிரபாகரன் ஓலையைப் பிரித்துப் படித்தார்.
துறைமுகத்தில் ஒரு சதித் திட்டம் நடத்த வீரசிம்மன் திட்டம். இளவரசர் உயிருக்கு ஆபத்து...
ஐயோ! இளவரசரை எப்படியும் காப்பாற்ற வேண்டும்.



(அடுத்த இதழில் முடியும்)


தும்பி, பிடிக்காதே

ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? விடுமுறையில் ரொம்ப சந்தோஷமாகத்தான் இருப்பீங்க. உங்கள் விடுமுறையில் நான்தான் சற்று கவனமாக இருக்க வேண்டும். உங்கள் விடுமுறைக்கும் எனக்கும் என்ன தொடர்பு என்று யோசிக்கிறீர்களா? உங்களில் சில 'வால்'கள் எங்களைப் பிடிப்பதையே தங்களோட பெரிய பொழுதுபோக்காக நினைக்கிறார்கள்.

என்னுடைய பெயர் தட்டான். உங்களில் சிலருக்கு இரண்டு, மூன்று பெயர்கள் இருப்பது போலவே எனக்கும் தட்டாரப் பூச்சி, தும்பி என்ற பெயர்களும் உண்டு. ஆங்கிலத்தில் Dragon Fly.

தீக்குச்சிக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. எப்படி என்கிறீர்களா? என் தலை தீக்குச்சியில் உள்ள மருந்து போலவும் உடல் குச்சி போலவும் இருக்கும். தலையில் சிறிய உணர் கொம்புகள் உண்டு. தலையின் முன் பகுதியில் பெரிய





கூட்டுக் கண்கள் உள்ளன. ஒவ்வொரு கூட்டுக் கண்ணும் 20,000 விழிலென்சுகளைக் கொண்டது. எனக்குப் பார்வை சக்தி அதிகம். தலையைத் திருப்பாமலேயே எல்லா திசைகளிலும் பார்க்க முடியும். மேலும் கீழும், முன்னும் பின்னும் என்று எப்படி வேண்டுமானாலும் பார்க்க முடியும். இப்படியெல்லாம் வசதி இருந்தும் கூட என்னைப் பிடிப்பவர்களிடமிருந்து என்னால் தப்ப முடியாததுதான் அதிசயம்! ஆந்தையாரைப் போல் என் தலையையும் 180 டிகிரிக்குத் திருப்ப முடியும்.





வண்ணத்துப் பூச்சி அளவுக்கு என்னிடம் அழகு இல்லை என்றாலும் என்னிடம் உங்களைக் கவர்வது

தும்பி!

என்னுடைய இறகுகள்தான் என்று நினைக்கிறேன். இரண்டு ஜோடி இறகுகளும் ஒளி ஊடுருவக் கூடியவை. சோப்புக் குமிழியில் தெரிவது போல வண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியவை.

எனக்குக் கால்கள் இருந்தாலும் கூட அந்தக் கால்களைக் கொண்டு நான் நடப்பதில்லை. ஒரு இடத்தையோ, பொருளையோ பற்றிக் கொள்ளவே கால்களைப் பயன்படுத்திக் கொள்கிறேன். அதாவது உங்களின் கை செய்யும் வேலையை என்னுடைய கால்கள் செய்கின்றன.

நான் ரொம்ப வேகமாகப் பறப்பேன். பூச்சி இனங்களில் என்னைத்தான் அதிக சுறுசுறுப்பு உள்ளவன் என்று ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். பறக்கும் போது இறக்கைகள் நிமிடத்திற்கு சுமார் 1000 தடவை அசைகின்றன என்றால் என் வேகத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்!

முன்னாலும், சட்டென்று திரும்பியும், தலைகீழாகப் புரண்டும் என்னால் பறக்க முடியும். ஆகாயத்தில் இறக்கைகளை விரித்தபடி அசைவற்று அப்படியே நிற்கவும் முடியும். நான்

எஸ். சுஜாதா

மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் பறப்பேன்.

எனக்கு விருப்பமான உணவு எது தெரியுமா? உங்களிடையே நோயைப் பரப்பும் ஈக்களும், கொசுக்களும்தான் என் உணவு. ஈயையும் கொசுவையும் சாப்பிட்டு உங்களுக்கு எவ்வளவு பெரிய நன்மை செய்கிறேன்! ஆகாயத்தில் பறந்தபடியே இரையைப் பிடித்து சாப்பிட்டு விடுவேன்.

கோடைகால ஆரம்பத்தில் பெண் பூச்சிகள் நீர்ப்பரப்பில் முட்டையிடுகின்றன. முட்டைகள் நீருக்குள் மூழ்கி அடியில் உள்ள சேற்றில் புதைந்து கொள்ளும். முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுக்கள் 3 ஆண்டுகாலம் சேற்றிலேயே வாழ்கின்றன. ஒரு புழு 12 முறை தோலுரித்துப் பூச்சியாக மாறிய பிறகுதான் நீரிலிருந்து வெளிப்பட்டு மேலே வரும்.

எங்களில் நிறைய வகைகள் உண்டு. இரண்டு செ.மீ. முதல் பதினைந்து செ.மீ. வரை நீளமுள்ள இனங்களும் உண்டு. உருவத்தில் எல்லோரும் பொதுவாக ஒத்திருந்தாலும் வண்ணத்தில் வேறுபடுகிறோம். எல்லா வெப்ப நாடுகளிலும் வாழ்கிறோம். ஒவ்வொரு உயிரினத்துக்கும் இயற்கை ஏதாவது ஒரு தற்காப்பு ஆயுதம் அளித்திருக்கிறது. ஆனால் எனக்கு வேகமாகப் பறப்பதைத் தவிர விஷச் சுரப்பியோ, கொடுக்கோ எதுவும் கிடையாது. உங்கள் கைகளிலோ எல்லது எதிரியின் கைகளிலோ அகப்பட்டுக் கொண்டால் அவ்வளவுதான். நீங்களாக என்னை விட்டால்தான் உயிர்பிழைப்பேன். அம்பி யாராவது எங்களைப் பிடித்தால் 'அம்பி, பிடிக்காதே தும்பி' என்று கட்டாயம் சொல்லுங்கள். யாருக்கும் தீங்கு செய்யாத, சாதுவான எங்களை இனி பிடித்து விளையாட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

கண்ணாடியில் சில விளையாட்டுகள்

அட்டை, ஆணி, முகம் பார்க்கும் கண்ணாடி, சில புத்தகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அட்டையை எடுத்து ஆணியால் நட்சத்திரம் போன்று கீறிக் கொள்ளுங்கள். அட்டையின் இரு பக்கமும் புத்தகங்களை அடுக்குங்கள். இரு அடுக்குகளின் மேலேயும் ஒரு பெரிய அட்டையை வைத்து விடுங்கள். முகம் பார்க்கும் கண்ணாடியைச் சற்றுப் பின்னே நட்சத்திரம் தெரிவது போல வைக்கவும். கண்ணாடியில் பார்த்துக் கொண்டே நட்சத்திரத்தை ஆணி முனையால் தடவிப் பாருங்கள். இவ்வாறு நீங்கள் நட்சத்திரத்தை ஒரே திசையில் ஆணியால் தடவ வேண்டும். திரும்பி வரக் கூடாது. இது சிரமமாக இருப்பதை உணர்வீர்கள்.



என்ன காரணம்?

கண்ணாடியில் தெரியும் உருவம் நட்சத்திரத்தின் தலைகீழ் உருவம். அதனால் உங்கள் கை இடமிருந்து வலமோ, வலமிருந்து இடமோ நகரும் பொழுது கண்ணாடியில் எதிர்த் திசையில் தெரிகிறது. ஆகவே மூளை சற்றே தடுமாறுகிறது.

இதே போல் கண்ணாடியை புத்தக அடுக்கின் உதவியுடன் செங்குத்தாக மேஜை மீது நிற்கச் செய்யுங்கள். கண்ணாடியில் நன்றாகத் தெரியும்படி தாளை வைத்து, கண்ணாடியில் பார்த்துக் கொண்டே உங்கள் பெயரையோ, ஒரு செய்தியையோ எழுதுங்கள். தாளைப் பார்க்கவே கூடாது. பிரதிபலிப்பைப் பார்த்துதான் எழுத வேண்டும். நீங்கள் எழுதும் எழுத்துகள் கண்ணாடியில் நேராக இருக்க வேண்டும். இதை ஒரு ரகசிய தகவலாக அனுப்பலாம். ஆனால் வாசிப்பவருக்கு இதன் ரகசியம் தெரிந்திருக்க வேண்டும்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி!

கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.



1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்று உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எந்த விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.


7. முடிவு தேதி 31.5.2002. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா.

8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.

9. கதைகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் 'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு - ரூ.500/-
இரண்டாம் பரிசு - ரூ.300/-
மூன்றாம் பரிசு - ரூ.200/-



அதிகாலைப் பொழுதில் ஆதியூர் கிராமமே விழித்துக் கொண்டது. ஊரின் மையத்தில் ஒரு பழங்காலக் கோவில். கோவிலைச் சுற்றிலும் பெரிய பெரிய ஆலமரங்கள். எந்த நேரமும் கிளிகளின் கூட்டம், ஆலமரங்களின் கிளைகளில் மாலை நேரங்களில் "அக்கூவ்" "அக்கூவ்" என்று சத்தமிட்டுக் கொண்டிருக்கும்.

கோவில் கிளிகள் என்று யாரும் அவற்றிற்கு இடையூறு செய்வதில்லை. பூஜை முடிந்து வருபவர்கள் கிளிகளுக்கு வாழைப் பழங்கள், அரிசிப் பொறி, பொறிகடலை ஆகியவற்றை மரத்தடியில் போட்டுவிட்டுச் செல்வார்கள்.

சிறுவர்கள் அந்த மரங்களின் அடியில்தான் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அன்று காலை கோவில் பக்கம் வந்தவர்கள் கோவில் கதவு திறந்திருக்கிறது என்று சொல்லி பூசாரியையும் அறங்காவலரையும் அழைத்து வந்து விட்டார்கள்.

கோவில் முன்பு ஊரே கூடிவிட்டது. உள்ளே சென்றவர்கள் இரும்புப் பெட்டி உடைக்கப்பட்டிருந்தது கண்டு திகைத்துப் போனார்கள். உள்ளே இருந்த நகைப் பெட்டியைக் காணவில்லை.

கோவில் தெய்வங்களின் விலை உயர்ந்த தங்க, வைர நகைகள் அதில் இருந்தன. இரவில் யாரோ வந்து கதவை உடைத்து நகைப்பெட்டியை திருடிக் கொண்டு சென்றுவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் ஆட்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இதுவரைக்கும் இல்லாத காரியமா நம்ம கோயில்ல திருட்டுல்ல நடந்து போச்சு."

"நம்ம சாமி சும்மா விட்டுடுமாக்கும். திருடன் யாருன்னு காட்டிக் கொடுத்திடாதாக்கும்."

எல்லோரும் அவரவர் பாட்டில் பேசிக் கொண்டிருந்தனர்.

சிலர் சென்று பக்கத்து நகரத்திலிருந்து போலீசாரை அழைத்து வந்து விட்டனர். பல வீடுகளில் சோதனைகள் நடந்தன. பலரிடமும் விசாரணை நடந்தது.

கோவிலுக்குள் யாரும் போகாமல் போலீசார் காவலுக்கு நின்றிருந்தனர். மனித ஆரவாரத்தோடு மரங்களிலிருந்த பறவைகளும் குறிப்பாகக் கிளிகளும் கூட பெரிதாகச் சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

பழமை வாய்ந்த கோபுரத்தில் குடியிருந்த புறாக் கள் கூச்சலிட்டவாறே கோபுரத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

பெரியவர்கள் யாரும் அன்று வேலைக்குப்



போகவில்லை. சிறுவர்கள் பள்ளிக் கூடமும் போக வில்லை. அவரவர்களும் கூடிக் கூடிப் பேசிக் கொண் டிருந்தார்கள்.

"நாளைக்கு மதுரையிலிருந்து போலீஸ் நாய் களைத் துப்புத்துலக்க கூட்டிட்டு வரப் போகிறார் களாம்."

கிளிகள் எங்கே?

"ஆமாம்! நாய்ங்க வந்து எத்தனை இடத்துல திருடுகளைக் கண்டுபுடிச்சி கொடுத்திருக்காம். எல்லாம் ஏமாத்து வேலை" என்று ஒருவர் கூறினார்.

அருகே சுற்றிலும் உள்ள ஊர்களிலிருந்தும் பெரியவர்கள் சிறுவர்கள் என கூட்டம் ஆதியூரில் கூடிவிட்டது.

சைக்கிளில் தனது தம்பி பூங்குன்றனுடன் வந்த பூங்கோதை, கணேசன், முருகன், கண்ணன், அமுதன், இளங்கோ ஆகிய மாணவர்களை ஓர் இடத்தில் கூட்டிப் பேசினாள்.

"இங்க பாருங்க, போலீஸ் நாய்ங்க நாளைக்குதான் வருதாம். நாம் ஏன் வேற முயற்சி பண்ணக் கூடாது?" என்று கேட்டாள்.

"திடீர்னு நாம என்ன செய்ய முடியும்?" என்றான் அமுதன்.

"அவதான் என்ன சொல் றான்னு கேளேன்" என்றான் இளங்கோ.

"சரி, சொல்லு பூங்கோதை"– இது கண்ணன்.

"நாமளே துப்பறியும் சிங்கங்களா மாறவா?" இது முருகன்.

"ஏன் முடியாதா?" என்றான் கணேசன். இவர் கள் பேசிக் கொண்டிருக்கும்போது போலீசார் வந்து "கூட்டம் போடாதீங்க. போங்க... போங்க" என்று விரட்டினார்கள்.

கோவில் பக்கம் இருந்த கூட்டம் கலைந்து போய் தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. சிறுவர் கூட்டமும் ஊரின் கடைசிக்குச் சென்று விட்டது.

பூங்கோதை கூறினாள், "உங் களில் யாராச்சும் ரெண்டு பேர் சைக்கிள்ள அய்யனார் மலை அடிவாரம் போயி நீலனைக் கூட்டியாங்களேன்."

"சரிதான், நல்ல ஐடியாதான்."

"சரி, உடனே புறப்பட்டுப் போங்க. அக்கா சொல்லிட்டாங்க."

கொ.மா. கோதண்டம்



ஜெர்மனியின் வடமேற்கில் ஒரு பள்ளத்தாக்கின் பெயர் நியான்டர் ஆகும். 1856ல் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் மனித எலும்பு, மண்டை ஓடு முதலியவற்றைக் கண்டுபிடித்தனர். அவர்கள் தாங்கள் கண்டெடுத்த எலும்புகளின் மனிதர்களுக்கு 'குள்ள மனிதர்கள்' என்று பெயரிட்டனர். மேலும் அவற்றை மற்றவையோடு ஒப்பிட்டதில் மனிதர்களிடம் இருந்து வேறுபட்டிருப்பது தெரிந்தது. எனவே அவர்கள் மனிதர்களின் முன்னோடிகள் என்று அறிந்தனர். 5 அடிக்கும் குறைவான உயரம் கொண்டவர்கள் இவர்கள். 1¼ இலட்சம் வருடங்களுக்கு முன்பு உலாவிய இவர்கள் 30,000 வருடங்களுக்கு முன்பு அழிந்து விட்டனர்.

- கோ. செந்தமிழ்ச் செல்வி

பூங்குன்றன் கூறியதும் அமுதனும் இளங்கோவும் ஆளக்கொரு சைக்கிளில் ஏறிப் புறப்பட்டனர். முருகனும் பின்னால் ஏறிக் கொண்டான். கூட்டம் ஓரளவுக்குக் கலையத் துவங்கியது.

இரண்டு மணி நேரத்தில் அவர்கள் மலைவாசிச் சிறுவன் நீலனை ஆதியூருக்கு அழைத்து வந்து விட்டனர்.

அந்த மாணவர்கள் நீலனுடன் கோவில் அருகே சென்றனர். அங்கு நின்ற போலீசார் அவர்களை விரட்டினர். கண்ணன் போலீஸ் அதிகாரியிடம் சென்றான்.

"சார் அடுத்த ஊர் மாணவர்கள் நாங்கள். சிறிது நேரம் கோவில் பக்கம் அனுமதித்தால் இந்த விஷயத்துல நாங்களும் உங்களுக்கு உதவலாம். தயவு செய்து எங்களை விரட்ட வேண்டாம் சார்" எனக் கேட்டுக் கொண்டான்.

"நீங்களா தம்பி? எப்படியப்பா உதவப் போறீங்க? அது யாருப்பா காட்டுப் பயலையும் கூட்டிட்டு வந்து இருக்கீங்க!" என்றார் கேலியாக அவர்.

"கொஞ்ச நேரம் பொறுத்துதான் பாருங்களேன்" என்றான் கணேசன்.

"சரி, சரி உதவுங்கப்பா" என்றவர் போலீசாரைப் பார்த்து, "இவங்களை விரட்டாதீங்கப்பா" என்றார்.

மாணவர்கள் நீலனைக் கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர். பின் கோவிலைச் சுற்றிக் காட்டினர். இடுப்பில் ஒரு கோவணத் துண்டும் பரட்டைத் தலையும் அதில் ஒரு முண்டாசுமாக இருந்தான் நீலன். கோவிலைச் சுற்றி வரும்போது ஒரு மரத்தடியில் நின்றான். கிளிகளின் சத்தத்தை உற்றுக் கேட்டான்.

"நீங்க எல்லாரும் கொஞ்சம் தள்ளிப் போயிருங்க" என்றதும் மாணவர்கள் சற்றுத் தள்ளி நின்றார்கள்.

இரண்டு கிளிகள் தரையில் பாய்ந்து வந்து நின்று "அக்கூ, அக்கூ" என்று கூச்சல் போட்டன. உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரி இவனைப் பார்த்து "என்னப்பா?" என்றார்.

"சாமி, இந்தக் கிளிங்க ஏதோ சொல்ல வருது."

"ஏண்டா, உனக்குக் கிளிகள் பாஷையெல்லாம் கூட தெரியுமா?" என்றார் அதட்டலாக.

"தெரியும் சாமி" என்றான் நீலன்.

"அப்ப என்னன்னு சொல்லு."

"சாமி, கிளிங்க 'அக்கூ'ன்னா இங்க வாங்கன்னு அர்த்தம், 'அக் குக் கூ'ன்னா எல்லோரும் வாங்கன்னு அர்த்தம், 'அக்கூயிக்கா'ன்னா அவசரமுன்னு அர்த்தம், 'அக்கக்கா'ன்னா நல்லாயிருக்கீங்களான்னு அர்த்தம். இப்படி நிறைய இருக்கு சாமி."

அவர் வியப்புடன், "டேய், டேய் என்னடா சொல்றே, சரி அப்ப இதுகிட்ட போயி என்னன்னு கேளு." நீலன் கிளிகளின் அருகில் சென்றான். அவை இரண்டும் மேலும் சிறிது தூரம் பறந்து சென்று தரையில் நின்றன. நீலன் அங்கு ஓடினான். அவை மேலும் இப்படியே செய்தன. அப்படியே ஊரின் கடைசிக்கே அழைத்து வந்து விட்டன.

போலீசார், மாணவர்கள், ஊர் பெரியவர்கள் கூட நீலனின் பின்னால் வந்து விட்டனர்.

கிளிகள் ஓடைக்கரையில் இருந்த ஒரு கிணற்றைச் சுற்றி சுற்றி வந்தன. நீலனும் அங்கே வந்து விட்டான். கிளிகள் கிணற்றுக்குள் பாய்வதும் மேலே பறப்பதுமாகக் கூச்சலிட்டன. நீலன் கிணற்றை எட்டிப்பார்த்தான். அதற்குள் ஊரே அங்கு கூடிவிட்டது. போலீசார் அவர்களை விரட்டியடித்தனர்.

"என்னப்பா என்னதான் நடக்குது?" என்றார் அதிகாரி.

"சாமி ராவுல வந்த திருடங்க நகைப்பெட்டிய தூக்கிட்டு வந்து இந்தக் கிணத்துல போட்டிருக்க லாம். பின்னால சாவகாசமா எடுத்துகலாமுன்னு நெனச்சிருக்கலாம். இந்தக் கிளிகள் அவங்க பின்னாலயே வந்து இதைப் பாத்திருக்கலாம்."

"சரிப்பா, இப்ப என்ன செய்ய?"

அவன் சிறிய கல்லை எடுத்து கிணற்றில் போட் டான். எவ்வளவு நேரத்தில் தரையிலிருந்து நீர்குமிழி வருகிறது எனக் கவனித்தான்.

"சாமி, கிணத்துல நாலு ஆளு உயரம் தண்ணி யிருக்கு. ஒரு கயிறு கொண்டு வரச் சொல்லுங்க. இந்த மரத்துல கட்டி கயிறை உள்ள விட்டு நான் இறங்கிப் பார்க்கிறேன். அப்படியே கொஞ்சம் நல் லெண்ணெயும் கொண்டு வரச் சொல்லுங்க" என் றான் நீலன்.

"நல்லெண்ணெய் எதுக்குப்பா?"

"சாமி, வாயில ஊத்திக்கிட்டு போயி தண்ணிக்கு அடியில துப்புனா அங்கே உள்ள பொருள் பளிச்சின்னு தெரியும்." சிறிது நேரத்தில் எண்ணெயும் கயிறும் வந்தது.

கயிற்றை மரத்தில் கட்டி அதைப்பிடித்துக் கொண்டு நீலன் கிணற்றில் இறங்கினான்.

ஐந்து நிமிடமாகியும் நீலன் தண்ணீருக்கு வெளியே வரவில்லை. போலீசார், அறங்காவலர், பூசாரி, சில மாணவர்கள் கிணற்றைச் சுற்றிலும் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நீர்க்குமிழிகளை அடுத்து நீலனும் வெளியே வந்து கயிறு வழியாக மேலே ஏறினான்.

"என்னப்பா ஒண்ணும் இல்லையா?"

அவன் சாவகாசமாகச் சுற்றுச் சுவர் தாண்டி தரையில் குதித்தான். தலைத் துண்டைப் பிழிந்து உடலைத் துவட்டினான்.


துவட்டி முடிந்ததும் மரத்தில் கட்டிய கயிற்றை மேலே இழுத்தான். கயிற்றின் கடைசியில் ஒரு பெட்டியும் மேலே வந்தது.


"இதே பெட்டிதான்" கத்தினார் பூசாரி.

பெட்டியை போலீஸ் அதிகாரியிடம் தந்தான் நீலன். பெட்டியை வாங்கிக் கொண்ட அவர் அவன் கையைப் பிடித்து குலுக்கி முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார்.

"நீலா, உனக்கு நன்றிப்பா. இரு, உனக்கு ஏதாவது செய்யறேன்."

மாணவர்கள் நீலனைத் தூக்கிக் கொண்டு ஆரவாரத்துடன் ஆதியூரைச் சுற்றி ஊர்வலமே நடத்தி விட்டனர்.





வண்ணப்பொடி ஓவியம்

தேவையான பொருட்கள் : கனமான சதுர அட்டை, வண்ணக் கோலப் பொடி, ஃபெவிக்கால், கறுப்புத் துணி, பிரஷ், பென்சில்.

செய்முறை : முதலில் கனமான அட்டையை எடுத்துக் கொண்டு அதன் ஓரத்தில் ஃபெவிக்கால் தடவி கறுப் புத் துணியை ஒட்டிவிடவும். பிறகு அதில் பூந்தொட்டி டிசைன் வரைந்து கொள்ளவும். ஒரு கிண்ணத்தில் ஃபெவிக்கால் கொஞ்சம் ஊற்றி தண்ணீர் சிறிது விட்டுக் கலக்கவும். அதை பிரஷ்மூலம் தொட்டுப் பூந் தொட்டியில் பூச வும். தொட்டிக்கு மஞ்சள் வண்ணப் பொடியைத் தூவி விடவும். இப்போது அழகிய தொட்டி உருவம் கிடைக் கும். அதே போல பூக்களும் வரைந்து ஃபெவிக்கால் தடவி ஒவ் வொரு பூவிற்கும் ஒவ்வொரு வண்ணப் பொடியைத் தூவி விடவும். அதன் காம்பு, இலைகளுக்குப் பச்சை வண்ணப் பொடியைத் தூவி விடவும். பிறகு அதைத் தலை கீழாகத் திருப் பினால் ஒட்டாமல் உபரியாக உள்ள கோலப் பொடியெல்லாம் வந்துவிடும். அழகிய பூந்தொட்டி டிசைன் கிடைத்து விடும். இதை எங்கு வேண்டுமானாலும் மாட்டலாம்.

- என். கிருஷ்ணகுமாரி, கோவை.

உங்கள் நினைவாற்றல் எப்படி?

1. பகல் நேரமா, இரவு நேரமா?
2. நீலா எதன்மீது ஏறி நிற்கிறாள்?
3. பறவைகள் எத்தனை உள்ளன?
4. என்னென்ன பிராணிகள் உள்ளன?
5. ஓட்டைச் சிவிங்கி எதைத் தன் வாயில் பிடித்திருக்கிறது?
6. கனகா என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

ஆறு கேள்விகளுக்கும் சரியாகப் பதில் அளித்தவர்களுக்கு ஞாபக சக்தி அதிகம். நான்கு கேள்விகளுக்கு சரியாகப் பதில் அளித்தவர்கள் சராசரி ஞாபக சக்தி உள்ளவர்கள். மூன்று, அதற்கும் கீழே பதில் அளித்தவர்கள் ஞாபக சக்தியை அதிகரித்துக் கொள்வது நல்லது.

புதிர் உலகம்

I உங்கள் நண்பரிடம் ஒரு எண்ணை எழுதச் சொல்லுங்கள். அது எத்தனை இலக்கங்கள் இருந்தாலும் சரி (A). தொடர்ந்து இன்னொரு எண்ணை எழுதச் சொல்லுங்கள் (B). இவ்விரு எண்களையும் கூட்டி எழுதச் சொல்லுங்கள் (C). பின்னர் B+C இவற்றைக் கூட்டி எழுதச் சொல்லுங்கள் (D). பின்னர் C&D, D&E, E&F, F&G, G&H, H&I என்ற வரிசையில் கூட்டி J வரிசை வரை எழுதச் சொல்லுங்கள். இவ்வாறு எழுதப்பட்ட 10 எண்களின் மொத்த கூட்டுத்தொகையை நீங்கள் கூட்டாமலேயே சொல்லிவிட முடியும். G வரிசை எண்ணை 11ஆல் பெருக்கினால் விடை கிடைத்து விடும்.

க. திவ்யா,
பதினனோராம் வகுப்பு இ பிரிவு
சுவாமி தயானந்தா பள்ளி, திருவாரூர்.


II) A) ராமுவிடம் நான்கு முழ வேட்டிகள் நிறைய இருந்தன. ஒரு வேட்டியை நான்கு ஓரடித் துண்டுகளாக வெட்ட முடியும். ராமுவுக்கு 100 ஓரடித் துண்டுகள் வேண்டும். அப்படியானால் அவன் வேட்டிகளில் எத்தனை வெட்டுகள் வெட்ட வேண்டும்?

B) ஒரு விருந்தில் கலந்துகொண்ட 8 பேர், ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கை குலுக்கிக்கொண்டால் அங்கு எத்தனை கை குலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?

- ஸ்ரீரா. இரவிவர்மன்,
பதினோராம் வகுப்பு 'அ' பிரிவு,
அ.மே.நி.பள்ளி, விளந்தை,
அரியலூர் மாவட்டம்.

III) *1456789* - இவற்றில் ஒவ்வொரு எண்ணையும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி ஒரு கூட்டல் கணக்குப் போட வேண்டும். அதன் கூட்டுத் தொகை *1111* என்று வர வேண்டும். ரெடியா?

தங்கவயல் பழனி, சென்னை.



IV) ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி ஆழம் உள்ள குழியில் எவ்வளவு மண் இருக்கும்?

- கே. சுதர்ஷன், தூத்துக்குடி.

V) 1. மாதா, பிதாவிற்கு அடுத்தவர் ______

2. காலரா ஏற்படுத்தும் பாக்டீரியாவால் பாதிக்கப்படும் உறுப்பு ______

கை குலுக்கல்கள் எத்தனை?

3) கூடு கட்டி வாழாத பறவை ______

4) மகாத்மா காந்தியின் தாய்மொழி ______

5) சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் ______

6) காவிரி உற்பத்தி ஆகும் மலை ______

7) குச்சிப்புடி நடனம் ஆரம்பமான இடம் ______

8) மகாபாரதப் போரை நினைவுறுத்தும் ஸ்தலம் ______

9) இந்தியாவில் விளையும் பொருட்களிலேயே மிக அதிக விலை விற்பது ______

- சிவ.மணவழகி, திருச்சிற்றம்பலம்,
நாகை மாவட்டம்.

விடை 64 ஆம் பக்கம்

● ம.மாலதி, சென்னை - 21

? குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்படும்போது தொக்கம் (சீரணமாகாமல் வயிற்றில் தங்கிவிட்ட உணவு) எடுத்தால் சரியாகிவிடும் என்று சொல்லுகிறார்கள். இது சரிதானா, டாக்டர்?

! இது சரியில்லை, மாலதி. தொக்கம் எடுப்பதால் வாந்தியும் வயிற்றுப் போக்கும் நிற்பதில்லை. இது ஓர் ஏமாற்று வேலை. நம் உடம்பின் அமைப்புப்படி வயிற்றுக்குள் சென்று விட்ட எந்தப் பொருளையும் வாயில் ஒரு குழாயை வைத்து உறிஞ்சி எடுத்துவிட முடியாது. குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்படுவதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். ஒன்று தாய்மார்கள் கவனக்குறைவாக அசுத்தமான கைகளாலோ, அசுத்தமான பாத்திரத்திலோ அல்லது அசுத்தமான தண்ணீரிலோ உணவைத் தயாரித்துக் கொடுப்பது. இரண்டாவது குழந்தைகள் தவழும்போது, தரையில் விளையாடும் போது, அங்குள்ள அழுக்குகளை வாயில் வைத்துக் கொள்வது. இவற்றின் மூலம் பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் குழந்தையின் இரைப்பை மற்றும் குடல் பகுதிகளை அடைந்து அவற்றைப் பழுதாக்கி விடுவது. மூன்றாவது காரணம் புட்டிபால் சேராமல் அஜீரணம் ஆகிவிடுவது. கீழ்கண்ட வழிகளைப் பின்பற்றினால் குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படாது. பால் கலக்குவது, சாதம் பிசைவது போன்றவற்றை கைகளை நன்றாகச் சுத்தம் செய்த பிறகே செய்ய வேண்டும். பால் பாட்டிலை நன்கு சுத்தப்படுத்த வேண்டும். உணவிலோ, பாத்திரங்களிலோ ஈக்கள் மொய்க்காமல் பாதுகாக்க வேண்டும். சிறு குழந்தைகள் வளருகிற வீடுகளில் தரையை எப்போதும் சுத்தமாகப் பேண வேண்டும்.



● ந. தமிழ்ச் செல்வி, கல்லல்.

? இரத்தம் போல் சிவப்பாக உள்ள பீட்ரூட் போன்ற காய்கறிகள் இரத்த அபிவிருத்திக்கு அவசியம் என்று சொல்லுகிறார்களே டாக்டர்?

! உண்மையில்லை, தமிழ்ச் செல்வி. நம் இரத்தத்தின் நிறமும், பீட்ரூட்டின் நிறமும் ஒரே நிறம் (சிவப்பு) என்பதால் பீட்ரூட் சாப்பிட்டால் இரத்தம் உற்பத்தியாகிவிடும் என்ற தவறான நம்பிக்கை மக்களிடத்தில் தலை தூக்கி விட்டது. நம் இரத்தம் சிவப்பாக இருப்பதற்கு முக்கிய காரணம் ஹீம் என்ற இரும்புப் பொருள் இரத்த அணுக்களில் இருப்பதுதான். இதுபோல் பீட்ரூட் சிவப்பாக இருப்பதற்கு பீட்டா கரோட்டீன் என்ற நிறமிப் பொருள் காரணமாகிறது. ஹீம் வேறு, பீட்டா கரோட்டீன் வேறு. நமக்கு இரத்தம் உற்பத்தியாவதற்கு ஹீம் அவசியம். ஹீம் உற்பத்தியாவதற்கு இரும்புச் சத்து

பீட்ரூட் சாப்பிட்டால் இரத்தம் சுரக்குமா?





அவசியம். இரும்புச் சத்து சிவப்பு நிறக் காய்கறிகளைவிட பச்சை நிறக் காய்கறிகளிடம்தான் மிக அதிக அளவில் உள்ளது. உதாரணமாக, காலிஃப்ளவர், முட்டைகோஸ், பீர்க்கங்காய், புடலங்காய், பூசணிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், கொத்தமல்லி, முருங்கைக்கீரை, அகத்திகீரை, பசலைக்கீரை மற்றும் பிற பச்சை இலைக் காய்களிடம் இரும்புச் சத்து அதிகமாக உள்ளது. இந்தக் காய்களோடு பீட்ரூட்டை ஒப்பிடும்போது பீட்ரூட்டில் உள்ள இரும்புச் சத்து குறைவுதான்.



● த. இளவேனில், சென்னை - 17

? என் அம்மா 'பாலை அதிகமாகச் சாப்பிட்டால் சளி பிடித்துவிடும்' என்று எச்சரிக்கிறார். இது எவ்வளவு உண்மை டாக்டர்?

! பாலைக் குடிப்பதற்கும் சளி பிடிப்பதற்கும் துளியும் தொடர்பில்லை இளவேனில். பாலில் உள்ள கொழுப்புப் பொருள் பாலைக் குடித்தபின்பு நாக்கிலும், தொண்டையிலும் ஒருவித பிசுபிசுப்புத் தன்மையை ஏற்படுத்துகிறது. இதைத்தான் மக்கள் சளி என நினைத்துக் கொள்கின்றனர். உண்மையில் சளி எப்படி பிடிக்கிறது தெரியுமா? மூக்கு, தொண்டை, நுரையீரல் ஆகிய மூன்றிலும் கோழைப்படலம் என்ற அமைப்பு உள்ளது. இது மியூசின் என்ற திரவத்தைச் சுரக்கிறது. சாதாரணமாக இது பார்ப்பதற்குப் பளிங்கு மாதிரி இருக்கும். பிசின் மாதிரி ஒட்டிக் கொள்ளும் குணமுடையது. நாம் சுவாசிப்பதற்கு இது மிக மிகத் தேவை. சுவாசப்பாதை வறண்டு விடாமல் இருப்பதற்கு மியூசின்தான் உதவுகிறது. காற்றில் கலந்து வரும் தூசு, கிருமிகள் போன்றவை நுரையீரலுக்குள் புகுந்து விடாதபடி தடுக்கிறது. தூசு மற்றும் கிருமிகள் பிசின் போன்ற இந்தத் திரவத்தில் ஒட்டிக் கொள்வதால் காற்று சுத்தமடைந்து நுரையீரலுக்குள் செல்கிறது. மாறாக, காற்றில் கலந்து வரும் கிருமிகளும், தூசுகளும் பெருமளவில் இருந்தால் அவற்றை வெளியேற்றுவதற்கு இந்தத் திரவமும் அதிகமாகச் சுரக்கும். இதுமட்டுமல்ல, சில கிருமிகளோடு சண்டை போட்டு அவற்றைக் கொல்லும் திறனும் மியூசினுக்கு உண்டு. இது போடும் சண்டையில் கிருமிகளும் சாகும். கோழைப்படல அணுக்களும் அழியும். அப்போது தூசு, கிருமிகள், அழிந்த அணுக்கள், இறந்த கிருமிகள் (பாக்டீரியா, வைரஸ்) எல்லாமே மியூசின் திரவத்தில் கலந்து சளியாக மாறும். கிருமிகளின் பாதிப்பு மூக்கில் ஏற்பட்டால் மூக்குச்சளி உண்டாகும். அதுவே தொண்டையில் ஏற்பட்டால் தொண்டைச் சளி உற்பத்தியாகும். இல்லை, நுரையீரலில் தான் பாதிப்பு என்றால் நெஞ்சுச் சளி (நுரையீரல் சளி) உருவாகும். சில நோய்க் கிருமிகள் ஒரே சமயத்தில் மூக்கு, தொண்டை, நுரையீரல் இந்த மூன்று இடங்களிலும் சளியை உற்பத்தி செய்வதும் உண்டு.

டாக்டர் கு.கணேசன்



• சர்ச்சில்

போக விரும்பிய இடம்!

அது அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் ஆபிரகாம் லிங்கன் போட்டியிட்ட சமயம். ஒரு நாள் லிங்கன், தம்மை எதிர்த்துப் போட்டியிடுகிற வேட்பாளருக்கு ஆதரவாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்குச் சென்று, அங்கே பொது மக்களோடு அமர்ந்து கொண்டார்.

அக்கூட்டத்தில் பிரசாரம் செய்து கொண்டிருந்த ஒரு பாதிரியார் லிங்கனைக் கவனித்து விட்டார். அவர் கூட்டத்தைப் பார்த்து, "நீங்கள் எல்லாம் ஆபிரகாம் லிங்கனுக்கு எதிராக வாக்களித்தால் நல்வாழ்வு வாழ்ந்து சொர்க்கத்துக்குப் போக முடியும். அவ்வாறு லிங்கனுக்கு எதிராக வாக்களித்து சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் தயவு செய்து எழுந்து நில்லுங்கள்" என்றார்.

ஆபிரகாம் லிங்கனைத்தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்றார்கள். லிங்கன் மட்டும் அமர்ந்தே இருந்தார்.



• நேரு

நேரு விடம் கணக்குக் கேட்ட மோதிலால்!

எல்லோரையும் அமரச் சொன்ன பாதிரியார், "இப்போது ஆபிரகாம் லிங்கனுக்கு ஆதரவாக வாக்களித்து நரகத்திற்குச் செல்ல விரும்புகிறவர்கள் எழுந்திருக்கலாம்" என்றார்.

கூட்டத்தில் யாருமே எழுந்திருக்கவில்லை. லிங்கனும் எழுந்திருக்காமல் அமர்ந்தே இருந்தார்.

இதைக் கண்ட பாதிரியார் ஆபிரகாம் லிங்கனைப் பார்த்து, "என்ன, நீர் சொர்க்கத்துக்கும் போக விரும்பவில்லை, நரகத்துக்கும் போக விரும்பவில்லை. வேறு எங்குதான் போக விரும்புகிறீர்?" என்று எரிச்சலோடு கேட்டார்.

ஆபிரகாம் லிங்கன் எழுந்து, "நான் வெற்றி பெற்று அமெரிக்க நாடாளுமன்றத்துக்குப் போக விரும்புகிறேன்" என்று பதிலளித்தார்.

— மு. பெரியசாமி,
விட்டுக்குட்டி.

கணக்கு...

ஜவாகர்லால் நேரு ஹார்வார்டு சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார். அவரது தந்தை மோதிலால் நேரு வாரம் ஒருமுறை நேருஜிக்குப் பணம் அனுப்புவார். ஒரு தடவை நேரு செலவுக்கு மேலும் பணம் தேவை என்று தந்தைக்குக் கடிதம் எழுதினார். அதைக் கண்டதும் மோதிலால் நேருவுக்கு, ஒரு வாரத்திற்குள் இரண்டாம் முறையாகப் பணம் கேட்கிறானே, பிள்ளை என்ன

செலவு செய்கிறானோ, என்ற எண்ணம் ஏற்பட்டது. 'அனுப்பிய பணத்துக்குக் கணக்கு அனுப்பவும்' என்று பதில் எழுதினார்.

நேருவும் பதில் அனுப்பினார். அந்தப் பதிலைக் கண்டதும் மோதிலால் நேரு, பணத்தை உடனே அனுப்பி வைத்தார். தந்தை அப்படி செய்ய நேரு அனுப்பிய பதில் இதுதான்: 'என்மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் என்னிடம் கணக்குக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அப்படி என் மீது நம்பிக்கை இல்லாத பட்சத்தில் நான் அனுப்பும் கணக்கினால் உங்களுக்குப் பலனில்லை.'

• சி.வி. இராமன்





• கி.வா.ஜ.

பிரபலங்களின் வாழ்வில்...

பிஞ்சு

தமிழ் அறிஞர் கி.வா.ஜ., ஒருமுறை மும்பை சென்றிருந்தார். அப்போது சிலர் அவரைக் காண வந்திருந்தனர். அவர்கள் நன்கு கனிந்த வாழைப்பழச் சீப்பு ஒன்றை அவர் முன் வைத்து வணங்கினார்கள். கி.வா.ஜ. தங்கியிருந்த வீட்டுக் குழந்தை தளர் நடையிட்டு வந்து அந்தப் பழச் சீப்பிலிருந்து பழங்களை இழுத்தது. இரண்டு பழங்கள் பிய்ந்து வந்தன. வீட்டுக்காரர் குழந்தையை "அதை எடுக்காதே!" என்று மிரட்டினார். அப்போது கி.வா.ஜ. "பழத்தில் இரண்டு பிஞ்சு வந்துவிட்டனவே என்று கோபிக்காதீர்கள். பிஞ்சு எடுத்தது, பிஞ்சு வந்தது!" என்றார்!

– ஏ.கே. நாசர்,
லெட்சுமாங்குடி.

குருவைத் தேடி...

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி சர்.சி.வி. ராமன் ஒருமுறை ஓர் இளம் மருத்துவரைச் சந்தித்தார். நிறத்தின் தன்மைகளையும், கண் பார்வையின் தன்மைகளையும் பற்றிய தமது மிக நவீனமான ஆராய்ச்சிகளைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூறிய பிறகு சி.வி. ராமன், "கண்பார்வை சம்பந்தமாகப் பௌதிக அம்சங்களை நான் நன்கு அறிந்து கொண்டுவிட்டேன். ஆனால் உடலியல் ரீதியாகக் கண் பார்வை பற்றிய விஷயங்களை நான் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. தயவு செய்து உங்கள் வீட்டு முகவரியைத் தெரிவியுங்கள். உங்களுக்கு எப்போது ஓய்வு இருக்கும் என்பதையும் கூறுங்கள். இந்த விஷயம் பற்றித் தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

அதற்கு அந்த மருத்துவர், "ஐயா! நீங்கள் உத்தரவிட்டால் போதும். உங்களுக்கு வசதியான நேரத்தில் நான் வரைபடங்களுடன் உங்கள் இல்லத்திற்கு வருகிறேன். என்னுடைய தொலைபேசி எண்...."

அவரது பேச்சை இடைமறித்தார் சர்.சி.வி.ராமன்.

"நண்பரே! கற்பவன் நான். எனவே நான்தான் குருவைத் தேடி வரவேண்டும்!" என்றார்.

– எம். ஜரினா பானு, லெட்சுமாங்குடி.

யார்?

ஒரு சமயம் சர்ச்சில் மனநிலை காப்பகத்திற்கு விஜயம் செய்தார். எதிரில் வந்த ஓரளவு குணமான ஒரு நோயாளி சர்ச்சிலிடம் "நீங்கள் யார்? உங்கள் பின்னால் இவ்வளவு பேர் வருகிறார்களே?" என்று கேட்டார். உடனே சர்ச்சில் பெருமிதத்துடன், "நான்தான் சர்ச்சில்!" என்றார். அதற்கு அந்த நோயாளி, "கவலைப்படாதீர்கள்! நானும் இங்கே சேர வரும்போது 'ட்ரூமன்' என்று சொல்லிக்கொண்டுதான் வந்தேன். எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும்!" என்றதும் சர்ச்சில் முகத்தில் ஈயாடவில்லை.

– ஆர். குட்டிபிரசன்னா, கரூர்.

சோள நெய்

நேபாள மன்னர் விக்கிரமசிங்கிடம் ஜயவர்மன் என்ற புத்திசாலியான மந்திரி இருந்தான். அரசி இளங்கொடி தன் சகோதரனை மந்திரியாக்கும்படி தினமும் நச்சரித்தாள்.

"அரசர் மந்திரியாகப் பதவி வகிக்க மதியூகம் வேண்டும். உன் தம்பி பேசாமல் நிம்மதியாகச் சாப்பிட்டு சுக வாழ்வு வாழட்டும்" என்று சொல்லிப் பார்த்தார். அரசி கேட்கவில்லை.

"சரி. அப்படியானால் ஒரு சோதனை வைக்கிறேன். அதில் ஜெயித்தால் அமைச்சனாக்குகிறேன்" என்றார் அரசர். ராணி மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டாள்.

மைத்துனனை அழைத்து "இன்று மாலைக்குள் ஒரு லட்சம் ரூபாய் வரி திரட்டி வரவேண்டும். ஜனங்களை இம்சித்து வரி திரட்டக் கூடாது. அவர்களே மகிழ்ச்சியாகத் தர வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

மைத்துனன் மாலை வரை மூளையைக் கசக்கியதுதான் மிச்சம். ஒரு வழியும் தோன்றவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டான்.

அரசி கோபத்துடன் "போகாத ஊருக்கு வழி சொல்கிறீர்கள்! என் தம்பிக்குப் பதவி கொடுக்கக் கூடாதென்று செய்த சதி இது. இதையே உங்கள் மேதாவி ஜயவர்மனைச் செய்யச் சொல்லுங்கள்" என்று குமுறினாள்.

மறுநாள் அரசர் ஜயவர்மனை அழைத்து "மக்களைக் கொடுமைப் படுத்தாமல் இன்று மாலைக்குள் ஒரு லட்சம் ரூபாய் வரி வசூலிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டான்.


ஜயவர்மன் அந்தந்த நகரத்து அதிகாரிகளை அழைத்தான். "அடுத்த ஆண்டு மழை பெய்யாது என்று வான இயல் வல்லுனர்கள் சந்தேகிக்கிறார்கள். அதை ஜோதிடர்களும் ஆமோதிக்கிறார்களாம். அதனால் இன்று ஒருநாள் யாரும் குளிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று உத்தரவிட்டான்.

செய்தி காட்டுத் தீயெனப் பரவியது. "ஐயா! எங்கள் வீட்டில் குழந்தைக்குப் பிறந்த நாள். குளிக்காமல் எப்படி யாக காரியங்களை நடத்துவது? இந்த அபராதத்தை ஏற்றுக் கொண்டு எங்களைக் குளிக்க அனுமதிக்க வேண்டும்."

"ஐயா! இன்று என் தாயாரின் நினைவு நாள். குளிக்காமல் சிரார்த்தம் நடத்த முடியாது. இந்தக் காணிக்கையை ஏற்றுச் சலுகை காட்ட வேண்டும்."

இவ்வாறு ஆளுக்கொரு காரணத்தைச் சொல்லி பொன்னும், பொருளுமாகப் பரிசளித்தனர். குடம் தண்ணீருக்கு இவ்வளவு என்று எண்ணிக் கொடுத்தவர்களும் உண்டு.

இரண்டு லட்சம் சேர்ந்திருந்தது. ஒரு லட்சத்தை, அரசரிடம் சேர்ப்பித்த ஜயவர்மன் ஒரு லட்சத்தைக் குளம், ஏரி இவற்றைத்



தூர் எடுக்கச் செலவிட்டான். மக்கள் மன்னனைப் புகழ்ந்தனர்.

அரசி பொறாமையால் ஜயவர்மனை ஒழிக்கத் திட்டமிட்டாள். தனக்குத் தீராத வயிற்று வலி என்று நாடகமாடினாள். பணத்துக்காக மருத்துவரும் அரசியின் திட்டத்துக்கு ஒத்துழைத்தார்.

"சோள நெய் கிடைத்தால் அதில் இந்த மருந்தைக் கலந்து கொடுக்கலாம். வலி நிற்கும்" என்றார் மருத்துவர்.

அரசர் ஜயவர்மனை அழைத்து "ஒரு படி சோள நெய் வாங்கி வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

'சோள மாவு கிடைக்கும். சோள நெய்க்கு என்ன செய்வது?' என்று சிந்தித்த அமைச்சர் இது அரசியின் சதி என்பதைப் புரிந்து கொண்டான். சதியைச் சதியால் முறியடிக்க திட்டமிட்டான்.

அன்று நள்ளிரவில் அரச குடும்பத்தினர் நீராடும் பொய்கையில் ஜயவர்மனின் மனைவி அழுக்குத் துணிகளைத் துவைத்தாள். காவலர் இழுத்துப் போய் அரசர் முன் நிறுத்தினர்.

அரசர் "யார் நீ? இக்குளத்தில் மற்றவர் நீராடவே கூடாது என்று

மாலதி

சட்டம் போட்டிருக்கையில் நீ துணி துவைப்பதின் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"எங்கள் வீட்டுக் காளை மாடு கன்று போட்டிருக்கிறது. சுத்தமான நீரில் நள்ளிரவில் துவைத்த துணியால் கன்றைத் துடைத்தால்தான் மாடு பால் கொடுக்கும். அந்தப் பாலைச் சோளத்தில் விட்டு அரைத்தால்தான் நெய் கிடைக்கும். அரசியாரின் நோய்க்கு நெய் வேண்டாமா? என் கணவர் ஜயவர்மரின் உத்தரவுப்படிதான் இதைச் செய்கிறேன். ஊரிலுள்ள நீர் நிலைகள் அசுத்தமாயிருக்கின்றதே!" என்று அடுக்கினாள்.

அரசர் குழப்பத்துடன் "காளைமாடு கன்று போடுமா? சோளத்துக்குப் பால்விட்டு அரைத்தால் நெய் கிடைக்குமா? என்ன உளறுகிறாய்?" என்று கேட்டார்.

"உளறல்தான்! மன்னன் எவ்வழியோ அவ்வழிதானே மக்களும்! எருமை நெய், பசு நெய், ஒட்டக நெய் என்று கேட்டிருக்கிறேன்! சோள நெய் கேட்டிருக்கிறாரே வைத்தியர்!" என்றாள் ஜயவர்மன் மனைவி.

அரசன் அப்போதுதான் தன் தவறை உணர்ந்தான். மந்திரியின் புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சிக் கொண்டு அந்தப் பெண்மணியை அனுப்பி வைத்தான்!

அரசியிடம் நடந்ததைச் சொல்லி அவளைத் திருந்தும்படி எச்சரித்தான். வைத்தியரையும் கூப்பிட்டுக் கண்டித்தான். ஜயவர்மன் நீண்டகாலம் மந்திரியாக சிறந்த முறையில் பணியாற்றினான்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ஆ	ஸ்	2 தி	ரே	லி	யா	■	ர்	3 வே
ல	■	ங்	■	டெ	■	து	■	க
ம	■	க	■	ண்	■	4 கா	க	ம்
ர	■	ள்	■	5 சு	ரை	■	■	■
ம்	6 நா	■	ரி	■	7 நு	■	8 ஆ	ம்
■	■	■	9 பொ	ன்	■	பு	■	ய
தை	ந்	10 ச	■	த	■	ப்	■	வி
த்	■	ரி	■	ந்	■	ரு	■	ர
11 ந	தி	■	லி	12 வே	ல்	13 நெ	ரு	14 தி

புதிர் உலகம் விடைகள் :

I. மொத்தக் கூட்டுத் தொகை = G= 38861x11 = 427471

4321	A
2157	B
6478	C +
2157	B
8635	D +
6478	C
15113	E +
8635	D
23748	F +
15113	E
38861	G +
23748	F
62609	H +
38861	G
101470	I +
62609	H
164079	J

4321	A
2157	B
6478	C
8635	D
15113	E
23748	F
38861	G
62609	H
101470	I
164079	J
427471	


II) A) 75 வெட்டுகள் வெட்ட வேண்டும். ஏனென்றால் ஒரு வேட்டியை 4 துண்டாக்க 3 வெட்டுகள் தேவை. 25 வேட்டிகளுக்கு 25X3 = 75 வெட்டுகள் தேவை. B) 28 கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்.

III) *86 + 74 + 951 = 1111*

IV) ஹி...ஹி... குழியில் ஏதுங்க மண் ?

V) 1. குரு, 2. குடல், 3. குயில், 4. குஜராத்தி, 5. குருநானக், 6. குடகுமலை, 7. குசேலபுரம், 8. குருக்ஷேத்திரா, 9. குங்குமப்பூ

புராணகால ஆக்டோபஸ்!



'ஆக்டோபஸ்' என்றால் உடனே, "எட்டு கரங்களை உடைய கடல்வாழ் பிராணி" என்று சொல்லி விடுவீர்கள். இதன் புராண வடிவம் ஒன்று உண்டு. அதன் பெயர் பஞ்சஜன். ஆயிரம் நீண்டகரங்கள் கொண்ட, மத்தியில் சங்கு வடிவம் உடைய அசுரன்! இந்த அசுரனுடன் கண்ணன் போர் புரிய நேர்ந்தது. எப்படி?

கம்சனின் மரணத்துக்குப் பிறகு அவனது தந்தை உக்கிரசேனரை அழைத்து, ஆறுதல் கூறி, அவரையே மீண்டும் அரியணையில் அமர்த்தினான் கண்ணன். நல்லாட்சி வழங்குமாறு கூறிவிட்டு, வசுதேவரையும் தேவகியையும் சிறையிலிருந்து விடுவித்தான். நந்தகோபரையும் அவருடன் வந்தவர்களையும் நல்ல வார்த்தை கூறி, திரும்ப கோகுலத்துக்கே அனுப்பி வைத்தான்.

அப்புறம்தான் ஒரு வேடிக்கை நடந்தது. வசுதேவர் தமது பிள்ளைகளுக்கு உபநயனம் நடத்தி வைத்தார். அத்துடன் விட்டாரா? "சாந்தீப முனிவரிடம் குருகுல வாசம் செய்து கல்வி பயிலுங்கள்" என்றார்.

தந்தையின் ஆசையைக் கண்ணனும் பலராமனும் உடனே நிறைவேற்றி வைத்தார்கள். ஆனால் சாந்தீப முனிவருக்கு, 'கண்ணனும் பலராமனும் கல்வியில் கரை கண்டவர்கள்; அவர்களுக்குத் தாம் கற்றுக் கொடுக்கக் கூடியது ஒன்றுமேயில்லை' என்பது சீக்கிரமே புரிந்து விட்டது. நாராயணனுடைய அவதாரம் என்பதை உணர்ந்து கொண்டாலும் தொடர்ந்து தம் கடமையைச் செய்தார். பாடம் போதித்தார்! கண்ணனும் கற்றுத் தேர்ந்தான்!

"குருதட்சிணையாக என்ன தரட்டும்?" என்று சில காலம் சென்று கேட்டான் கண்ணன். "அப்பனே! உன்னிடமிருந்து நான் தான் நிறையக் கற்றுக் கொண்டேன். என்றாலும் நீ கேட்பதால் சொல்கிறேன். என் மகன், சமுத்திர ஸ்நானம் செய்யும்போது காணாமல் போனான். அவனைத் திரும்பக் கொண்டு வந்து கொடுத்தால் மகிழ்ச்சி அடைவேன்" என்றார் சாந்தீபர்.

கடலில் குளித்துக் கொண்டிருந்த குருபுத்திரனை, பஞ்சஜன் என்ற அசுரன் தான் விழுங்கி விட்டான் என்று வருண பகவான் மூலம் அறிந்தான் கண்ணன். சமுத்திரத்தில் மூழ்கிச் சென்று, அந்த அசுரனை வதம் செய்தான். அவனுடைய மைய வடிவமாகிய சங்குடன் கரை ஏறி, சங்க நாதம் செய்தான்.

அதைக்கேட்டு எமதர்மராஜன் ஓடோடியும் வர, "பஞ்சஜன்யனால் விழுங்கப்பட்ட என் குருபுத்திரனைக் கொண்டு வா" என்றான்.

எமன் அவனுடைய ஆன்மாவைத் தருவித்தான். கண்ணன் அருளால் அந்த ஆன்மாவுக்குச் சரீரமும் திரும்பக் கிடைத்தது. குருதட்சிணையாக அவருடைய மகனைச் சாந்தீப முனிவரிடம் சேர்ப்பித்தான் கண்ணன்.

பஞ்சஜன் என்ற அசுரனின் மையப் பகுதியான சங்குதான் பாஞ்சஜன்னியம். அது குருக்ஷேத்திரத்தில் ஒலித்தது. அங்கு மட்டுமா? அதர்மத்துக்கும் தர்மத்துக்கும் இடையே எங்கு போராட்டம் நடந்தாலும் ஒலிக்கும். அது தர்மத்தில் உறுதியாக நிற்போருக்குக் கேட்கும்!

— ஆசிரியர்

கதைகதையாம் காரணமாம்...

புகைப்படம் அனுப்பலாமா?

நாங்களும்...

ஏப்ரல் கோகுலம் அட்டைப் படம் பிரமாதம். எங்களைப் போன்ற வாசகர்களின் புகைப்படங்களையும் அட்டையில் பிரசுரிக்கலாமே? அனுப்பட்டுமா?

— ப. சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை.

அன்புள்ள சௌந்தர்யா, கோகுலம் அட்டைப் படங்கள் அனைத்தும் அட்டைப் படக் கட்டுரையைத் தீர்மானித்த பிறகு அதற்கு ஏற்றாற்போல் புகைப்படக் கலைஞரால் படம் எடுக்கப்படுகிறது என்பது உங்களுக்கே தெரியும். அட்டைப்படத்துக்கு இல்லாவிட்டாலும் வாசகர்களால் எடுக்கப்பட்ட சிறந்த புகைப் படங்களை உள்பக்கங்களில் பிரசுரித்துப் பரிசளிக்கக் காத்திருக்கிறோம். — ஆர்.

கவர்ந்தன..

வலையில் சிக்கியவை பகுதியில் வெளிவந்த குல்லாய் கதை, புதிர்கள், ஜோக்ஸ் அருமை. தங்க மனசு, அதிர்ஷ்டத் தொப்பி படக்கதைகள் என்னைக் கவர்ந்தன.

— எம். பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி, போடி.



அற்புதமான படம்!

லகான் போஸ்டர் ரொம்ப அழகாக இருந்தது. அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டிருந்தது கூடுதல் சிறப்பு. ஆஸ்கர் விருது கிடைக்காவிட்டால் என்ன? உண்மையிலேயே லகான் அற்புதமான படம்தான்!

— கே. அருணா, கே. புவனேஷ்,
சென்னை.

அழுகை...

என் அருமை பிகாசன் கதை என்னை மிகவும் பாதித்தது. கதையைப் படிக்கும் போது நானே 'யோவாய்' ஆக மாறி விட்டேன். நெல் வயலில் பன்றியை விட்டு வரும்போது எனக்கும் அழுகை வந்துவிட்டது.

— வி. ராஜேஷ், பத்தாம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி, மதுரை.

விருந்து

குருவிக் குஞ்சின் முதல் அனுபவம் கதை நன்றாக இருந்தது. சின்னமனூர் சின்னப்பட்டாளம் நல்ல ஆரம்பம். கூடு கட்டும் கலைஞர்களின் வண்ணப்படங்கள் கண்ணுக்கு விருந்து.

— சத்யதீபா, நெருஞ்சிப்பேட்டை.

சிரிப்பு

குத்துச் சண்டை பற்றிய கட்டுரை பல விஷயங்களை அறியச் செய்தது. தங்க வாழைக்கன்று கதையைப் படித்து வாய்விட்டுச் சிரித்தேன். நகைச்சுவை அரங்கமும் பயங்கர சிரிப்பை வரவழைத்து விட்டது.

— ந. குமாரசாமி, ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி, சென்னை - 98.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் கோகுலம் ஐந்தாவது இதழ் வந்து விட்டது. இன்னும் ஏழு இதழ்களே உள்ளன. எனவே கோப்பைக்காகப் போட்டியிடும் பள்ளி மாணவ மாணவியர் தங்கள் படைப்புகளை அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் ஒவ்வொரு மாதமும் போட்டி வைத்து இரண்டு கைக்கடிகாரங்களை வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம் முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். கடைசி தேதி 20.5.2002. உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ஓவியப்போட்டி

பால், தயிர் போன்றவற்றை சத்தம் செய்யாமல் குடித்துவிட்டுச் செல்லும் பூனைகளைப் பார்த்திருப்பீர்கள். பூனை விளையாடலாம்; பால் குடிக்கலாம், எலிக்குப் பயம் காட்டலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முழு முகவரி தரவும்.

கடைசி தேதி 4.5.2002

ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!



இந்த மாதப் போட்டி

கீழே புகழ் பெற்ற அறிஞர்கள் எழுதிய ஆறு நூல்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நூல்களை எழுதியவர்களின் பெயர்களைக் கண்டுபிடித்து அனுப்ப வேண்டும்.

1. பெரிய புராணம் ______________
2. பாஞ்சாலி சபதம் ______________
3. கீதாஞ்சலி ______________
4. சத்ய சோதனை ______________
5. அக்னி சிறகுகள் ______________
6. அகல்விளக்கு ______________

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.





முதல் பரிசு
ரெ. செல்வரெத்தினம், பத்தாம் வகுப்பு.
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
நாகுடி அஞ்சல். புதுக்கோட்டை மாவட்டம்.




இரண்டாம் பரிசு
எஸ். பொன்மணி பிரியதர்சினி.
எட்டாம் வகுப்பு. பெரியகவுண்டன் புதூர்.
கரூர் வட்டம்.


பேருந்து நிலையம்

ஓவியப் போட்டி முடிவுகள்

ஏப்ரல் இதழில் 'பேருந்து நிலையம்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து பேருந்து நிலையங்கள் இங்கே உள்ளன.


ஆறுதல் பரிசு
க. வேங்கடநாராயணன்,
ஆறாம் வகுப்பு,
மதுரை.





ஆறுதல் பரிசு
ஜெ. அபிநயராதா,
பத்தாம் வகுப்பு,
த.ஆ.வே பெல் பள்ளி,
இராணிப்பேட்டை.


மூன்றாம் பரிசு
உ. சாத்தப்பன்,
எட்டாம் வகுப்பு,
எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, மதுரை.



வண்ணம்!

கதை: பா. கவிதா
பன்னிரண்டாம் வகுப்பு, புதுடெல்லி
படம்: சேகர்




ஆமாம், ஆமாம்! அப்பத்தானே ஆந்தைக்குக் கண் நல்லா தெரியும்.
ஹி...ஹி.. காகம் சொல்வதும் சரிதான்.
போட்டிக்கு முதல்நாள் இரவு –
கிளியே உனக்குத்தான் பரிசு. சூப்பரா இருக்கே!
ஆந்தையே பேசாமல் வேலையைச் செய். நேரமாகுது.
இந்தத் துணியால் கண்களைக் கட்டிக் கொள். ஸ்பெஷல் வண்ணம் கண்ல படக் கூடாது.
சரி, இதோ இரண்டு பொற்காசு.
கண் கட்டை அவிழ்த்த காகம் –
எனக்கு ஏன் இப்படி கறுப்பாகப் பூசி விட்டுட்டே?
என்னை எப்படியெல்லாம் இகழ்ந்து பேசினே? அதைக்கூட மன்னிச்சிடுவேன். களிமண் மேல் தங்கமுலாம் பூசி பொற்காசுன்னு ஏமாத்துறியே, அதுக்குத் தண்டனைதான் இது.
என்ன சொல்றே?
நீ நேற்று புறாவிடம் பேசிட்டிருந்ததைக் கேட்டேன். இது ஸ்பெஷல் சாயம். என்ன பண்ணினாலும் போகாது. உன் சந்ததியும் கறுப்பாகவே பிறக்கும். வரேன்.
காகம் முதல்முறையாகத் தன் தவறுக்கு வருந்தியது.

முன்னொரு காலத்தில் எமிர் அமீத் என்ற இளைஞன் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தான். அவனிடம் ஏராளமான தங்கம், கால் நடைகள் என்று குவிந்திருந்தாலும் கூடவே பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்ற தாராள சிந்தனையும் மனமும் இருந்தது. எந்த நேரத்திலும் தன்னைத் தேடி வருபவர்களுக்கு உணவளித்து உபசரிப்பதோடு தேவையான பணத்தையும் கொடுத்து உதவி வந்தான். இதனால் நாளடைவில் அவனிடமிருந்த செல்வம் குறைந்தது. கால்நடைகளும் குறைந்தன. கடைசியில் ஒரே ஒரு ஒட்டகம் மட்டும் அவனிடம் தங்கியது.

அந்த நேரத்தில் சுல்தானும் அவருடைய மந்திரியும் மதகுருமார்கள் போல் வேடமணிந்து ஏழ்மையான தோற்றத்துடன் நாடு முழுவதும் சுற்றிப்பார்க்க வந்திருந்தனர். அப்படியே ஒருநாள் மாலை எமிர் அமீதின் வீட்டிற்கும் வந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்த அமீத், தன் மனைவியிடம் சென்று விருந்தாளிகள் சாப்பிடுவதற்காக ஏதாவது உணவு தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டான். அவளோ "நம் வீட்டில் நமக்கே உணவு இல்லாத போது வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு உணவு தயாரிக்க நான் எங்கே போவேன்?" என்று கேட்டாள். "பக்கத்து வீட்டிற்குச் சென்று ஏதாவது வாங்கி வந்து சமைத்துப் போடு" என்றான் அமீத். அவளும் சரியென்று சொல்லி பக்கத்து வீட்டுக்காரியிடம் சென்று ஏதாவது கொடுத்து உதவும்படி கேட்டாள். "நானோ மிகவும் ஏழை. உங்களுக்குக் கொடுத்து உதவ என்னிடம் ஒன்றுமே இல்லை. உங்களிடமாவது ஒரு ஒட்டகம் இருக்கிறது. அதை வைத்து விருந்தினர்களை உபசரிக்கலாமல்லவா?'' என்று அவள் சொன்னாள். வீட்டிற்குத் திரும்பி வந்த அமீதின் மனைவி அவள் சொன்னதை அப்படியே அமீதிடம் சொன்னாள்.

அதைக் கேட்டதும் அமீத் உடனே தன்னுடைய வாளை உருவி அந்த ஒட்டகத்தை வெட்டினான். அவனது செயலைக் கண்டு பதறிய சுல்தான், "என்ன காரியம் செய்தாய்? நீ







எங்கேயாவது போகும்போது உன்னுடைய சுமைகளைச் சுமந்து செல்ல இந்த ஒட்டகம் பயன்பட்டிருக்கும் அல்லவா? அநியாயமாகக் கொன்று விட்டாயே?' என்று கேட்டார். ''அப்படி இல்லை. இந்த ஒட்டகத்தைவிட விருந்தாளிகளான உங்களைக் கௌரவிப்பதுதான் எனக்கு முக்கியம். இதற்குப் பிரதிபலனாக அல்லா எனக்கு ஏதாவது கொடுத்து உதவுவார்" என்று சொல்லி அவர்களுக்கு விருந்தளித்து உபசரித்தான் அமீத்.

அ. குமார்



கடைசி ஒட்டகம்!

விருந்து முடிந்ததும் "உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்டார் சுல்தான். 'எமிர் அமீத்' என்று சொன்னான். "வரும் வெள்ளிக் கிழமையன்று மசூதிக்குச் செல். உன்னுடைய ஒட்டகத்துக்கு ஈடான பணத்தைச் சுல்தான் கொடுப்பார்" என்று சொல்லி சுல்தானும் மந்திரியும் புறப்பட்டுச் சென்றனர்.

வெள்ளிக் கிழமை வந்தது. மசூதிக்குச் சென்றபோது தொழுகை நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்த ஒருவரிடம், "சுல்தான் இங்கு எங்கு இருக்கிறார்?" என்று கேட்டான் எமிர் அமீத். "அங்கு முழங்காலிட்டுக் கைகளை உயர்த்தி கடவுளின் ஆசியை வேண்டி பிரார்த்திக்கிறாரே, அவர்தான் சுல்தான்" என்று சுட்டிக் காட்டினார் அவர். "இல்லை. அவர் எனக்கொரு ஒட்டகம் தர வேண்டியே கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். இது தேவையில்லை. என்னுடைய தேவைகளை நானே தான் பிரார்த்தனை மூலம் பெற வேண்டும்" என்று சொல்லி வெளியே வந்தான் அமீத். மசூதி இருக்குமிடத்திலிருந்து சற்றுத் தொலைவு சென்று தான் கொண்டு வந்த விரிப்பைத் தரையில் விரித்தான். முழங்காலிட்டுக் கைகளை உயர்த்தி, "ஆண்டவனே, சுல்தான் எனக்காக என்ன வேண்டிக் கொண்டிருக்கிறாரோ அதையேதான் நானும் உன்னிடம் கேட்கிறேன்" என்று பிரார்த்தனை செய்தான்.

தொழுகை முடிந்து அமீத் கால்களை ஊன்றி எழுந்தபோது கால்கள் பூமிக்குள் புதைவதை உணர்ந்தான். கூடவே கால்களை ஊன்றிய இடத்தில் மண் சரிந்து

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

மார்ச் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சரியான விடை எழுதியிருந்தவர்களில் இருவர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. **பி. வனிதா,** ஏழாம் வகுப்பு, மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வாலாந்தரவை, இராமநாதபுரம் மாவட்டம்.
2. **வே. சுபஸ்ரீ,** ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, நல்லூர், திருவண்ணாமலை மாவட்டம்.

சரியான விடை:

தாய்லாந்து	- பேங்காக்
கனடா	- ஒட்டாவா
தெ. ஆப்பிரிக்கா	- பிரிடோரியா
ஆஸ்திரேலியா	- கான்பெரா
சீனா	- பெய்ஜிங்
மலேசியா	- கோலாலம்பூர்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

பள்ளம் ஏற்பட்டிருந்தது. கைகளால் அந்தப் பள்ளத்திலிருந்த மண்ணை மேலும் தோண்டிய போது பள்ளம் மேலும் பெரிதாகி சுரங்கம் போல் கீழே சென்றது. அமீத் துணிந்து அந்தப் பள்ளத்துக்குள் இறங்கினான். அங்குள்ள ரகசிய பெட்டகத்தைத் திறந்து பார்த்தபோது அதற்குள் ஏழு பீங்கான் ஜாடிகள் நிறைய தங்க நாணயங்கள் நிரம்பியிருப்பதைக் கண்டான். அனைத்தையும் தன்னுடைய வீட்டிற்குக் கொண்டுபோய் ரகசியமாகப் புதைத்து வைத்தான்.

இப்போது அமீதிடம் கால்நடைகள் வாங்கவும் பழையபடி தான தருமங்கள் செய்யவும் பணம் தாராளமாகப் புழங்கத் தொடங்கியது. வீட்டிற்குள்ளேயும் புதிய மெத்தை விரிப்புகள், கம்பளங்கள், கட்டில் என அலங்காரப் பொருள்களை வாங்கி அழகு படுத்தினான். அவனுடைய கால்நடைகள் நான்கு திசைகளிலும் தாராளமாக மேய்ச்சலுக்குச் சென்றன. அமீதின் வாழ்க்கையும் இடைஞ்சலின்றி சென்று கொண்டிருந்தது.

மாதங்கள் கழிந்தன. சுல்தான் தன்னுடைய மந்திரியை அழைத்து, "ஒரு விஷயத்தை நாம் மறந்தே போனோமே? தன்னிடமிருந்த ஒரே ஒரு ஒட்டகத்தைக் கொன்று நமக்காக விருந்து படைத்த அந்த இளைஞன் என்ன ஆனான்? மசூதிக்கு வரும்படி சொல்லியிருந்தோமே. அவனுக்காக வைத்திருக்கும் தங்கத்தைக் கூட வந்து வாங்கிச் செல்லவில்லையே? போய்ப் பார்க்கலாம் வாருங்கள்" என்று மந்திரியை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர்களிருவரும் முன்பு அமீதைச் சந்தித்த அதே இடத்திற்கு வந்தபோது வீட்டின் அமைப்பு மாறியிருப்பதைக் கண்டு சந்தேகப்பட்டனர். சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கால் நடைகள் இருந்தன. அங்கிருந்த ஒருவனிடம் இருவரும் சென்று, "இவையெல்லாம் யாருடையது?" என்று கேட்டனர். "எமிர் அமீதினுடையது" என்று பதில் வந்தது. "இந்தக் குதிரைகள்?", "இதுவும் அவருடையதுதான்" என்றான் அவன். "முன்பு நாம் வந்தபோது எதுவுமே இல்லாமலிருந்த அவனுக்கு இன்று இவ்வளவு செல்வம் எப்படி வந்தது? பார்த்துக் கேட்கலாம் வாருங்கள்" என்று சொன்னார் சுல்தான்.

வீட்டினுள் நுழையும் போதே இருவருக்கும் ஏதோ ஒரு அரண்மனைக்குள் நுழைவதைப் போன்ற பிரமிப்பு ஏற்பட்டது. இருவரையும் வரவேற்று அமரச் சொன்னான் அமீத். "ஓ அமீத், சென்றமுறை சுல்தான் வந்து சென்றபோது வெள்ளிக்கிழமை மசூதிக்கு வந்து உன்னுடைய ஒட்டகத்திற்குரிய பணத்தை வாங்கிச் செல்லும்படி சொன்னோமே. ஏன் வரவில்லை?" என்று கேட்டார் மந்திரி. உடனே அமீத் நடந்த விவரங்கள் அனைத்தையும் சுல்தானிடம் மறைக்காமல் சொன்னான்.

அப்போது மந்திரி குனிந்து சுல்தான் காதருகில் மெல்லக் கிசுகிசுத்தார். "மேன்மை தாங்கிய சுல்தான் அவர்களே, நீங்கள் எங்களை ஆட்சி செய்பவராக இருந்தாலும் உங்களுக்கென்று ஒரு ஜாடி நிறைய தங்க காசுகள் கிடையாது. இவனிடம் ஏழு ஜாடி தங்க நாணயங்கள் இருப்பது நல்லதல்ல. இப்போதே இவனைக் கொன்று விடுங்கள். நாளைய தினத்தில் தன்னிடமுள்ள குதிரைகளைக் கொண்டு பெரும் படையை உருவாக்க இவனால் முடியும். உங்களுக்கு எதிராகப் போர்

தொடுக்கவும் முடியும்" என்றார் மந்திரி. "அது சரியில்லை. அவன் நம்மை உபசரித்து விருந்தளித்ததை மறக்கக் கூடாது. அதற்கு பிரதியுபகாரமாக நாம் செய்ய வேண்டியது இதுதானா?" என்று கேட்டார் சுல்தான்.

"காலையில் எழுந்தவுடன் இரவு தூங்கும்போது ஒரு கனவு கண்டேன். அதில் வவ், வவ், வவ் என்றொரு சத்தம் கேட்டது. அதனுடைய பொருள் என்னவென்று உன்னால் சொல்ல முடியுமா? என்று அவனிடம் கேளுங்கள். வவ், வவ், வவ் என்று நாய்தான் குரைக்கும் என்று அவன் பதில் சொல்லுவான். இது போதும். உங்களை அவமதித்ததாகக் கூறி அவனுடைய தலையை வெட்டி விடலாம்" என்று சொன்னார் மந்திரி.

மறுநாள் காலை எமிர் அமீதுடன் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்த நேரத்தில் சுல்தான் சொன்னார்: "அமீத், நேற்றிரவு நான் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கண்ட கனவில் வவ், வவ், வவ் என்ற சத்தம் கேட்டது. இது ஏதோ கெட்ட சகுனம்போல் தோன்றுகிறது. இதன் அர்த்தம் என்னவென்று உன்னால் சொல்ல முடியுமா?"

"எங்களை ஆட்சி புரியும் சுல்தான் அவர்களே, சொல்கிறேன் கேளுங்கள். முதல் வவ் என்பதற்கு ஒளி என்று பொருள். உலகின் இருளை அகற்றி எங்களுக்கு ஒளி கொடுக்கும் இறைவா, உம்மை வணங்குகிறேன் என்பது அர்த்தமாகும். இரண்டாவது வவ் என்பது காற்று. நாம் சுவாசிப்பதற்கும் பறவை இனங்கள் பறப்பதற்கும் உதவும் காற்றைப் படைத்த இறைவா எங்கள் நன்றி என்று பொருளாகும். மூன்றாவது வவ் என்பதற்குப் பாவம் என்று பொருள். பாவம் செய்பவர்களையோ பாவத்தை நினைப்பவர்களையோ கடவுள் மன்னிக்கமாட்டார் என்பது பொருளாகும்" என்று அமீத் விளக்கினான்.

இதைக் கேட்டதும் மந்திரியின் மீது சுல்தானுக்குக் கட்டுக்கடங்காத கோபம் எழுந்தது. மந்திரி பதவியைப் பறித்தார். அமீதைப் பாராட்டியதோடு நிற்காமல் அவன் தன்னைவிட்டு எந்த நேரத்திலும் பிரியக் கூடாதென்பதற்காக தன்னுடைய மந்திரியாக அமர்த்திக் கொண்டார்.

(அரேபிய நாடோடிக் கதை)





ஸ்கேட்டிங்

அடையாறு சங்கரா பள்ளியில் முதல் வகுப்பு படிக்கும் சிறுவன் ஆகாஷ். தினசரி மாலை சாஸ்திரி நகரிலிருக்கும் வீட்டிலிருந்து பெசன்ட் நகர் கடற்கரைக்கு ரிக்ஷாவில் வந்துவிடுகிறான். காலில் சக்கரம் கட்டிக்கொண்டு அங்குள்ள ஸ்கேட்டிங் தளத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேல் நடந்தும், ஓடியும், காலைத் தூக்கியும், வளைத்தும் விதவிதமான ஸ்கேட்டிங் பயிற்சியைச் செய்கிறான். தேர்வு நடக்கும்போதுகூட பயிற்சியை விடுவதில்லை. அவன் செய்யும் வித்தைகளைப் பார்க்கும்போது ஒரு சிறந்த ஸ்கேட்டிங் ஆட்டக்காரர் சென்னையில் உருவாகிக்கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இரண்டு வயதிலிருந்தே ஸ்கேட்டிங் பயிற்சியில் குதித்துவிட்டான் ஆகாஷ். அவனைப் போன்றே பல 'குட்டீ'ஸ்கள் கண்ணைக் கவரும் பனியன்கள் அணிந்துகொண்டு சக்கர காலணிகளுடன் ஸ்கேட்டிங் தளத்தை வலம் வரும் காட்சி மனத்தைக் குஷிப்படுத்தும். ''என் கால்களுக்குப் பலம் கொடுக்கவே ஸ்கேட்டிங்'' என்கிறான் பொடியன் ஆகாஷ்.

நமது வீட்டில் சதா வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் சிறுவர்களைப் பற்றி, பெரியவர்கள் சொல்லும்போது, ''வீட்டிலேயே தங்குவது கிடையாது; காலில் சக்கரம் கட்டிக் கொண்டதுபோல வெளியில் சுற்றிக்கொண்டே இருக்கிறான்'' என்று செல்லமாகக் கண்டிப்பது உண்டு. அப்படி சொல்லும் பெரியவர்களின் பேரன்களோ, பேத்திகளோ உண்மையிலேயே கால்களில் சக்கரம் கட்டிக் கொண்டு ஸ்கேட்டிங் பயிற்சிகளில் ஈடுபடும் வாய்ப்பு சென்னையில் இருக்கிறது. சென்னை அண்ணாநகரிலும் பெசன்ட் நகர் கடற்கரையிலும் ஸ்கேட்டிங் பயிற்சி தளங்கள் இருக்கின்றன. ''ஸ்கேட்டிங் மிகச் சிறந்த உடற்

Sliding. காலில் சக்கரம் கட்டிய பின் பாலன்ஸ் செய்து நடக்கவே நல்ல பயிற்சி வேண்டும். பிறகு இரண்டு கால்களையும் சரியான கால இடைவெளிகளில் ஒன்றன்பின் ஒன்றாக பூமியிலிருந்து உயரே தூக்கி, பின் சற்று வேகத்தோடு பூமியில் அழுத்தம் கொடுக்க சக்கரம் வேகமாகச் சுழன்று, ஆட்டக்காரர் முன்னே பாய்ந்து செல்வார். அப்புறம் இடது, வலது பக்கங்களில் சாய்ந்தவாறே பயணிப்பது ஒரு பயிற்சி. இந்த அடிப்படைகளில் நன்றாகத் தேறிவிட்டால் பின்னர் half camel, full camel போன்ற பயிற்சிகள். நன்றாகக் குனிந்து, முதுகை மட்டும் உயர்த்தி, ஒட்டகம் போன்று வளைந்த





கழுத்துடன் முகத்தை நேராக வைத்துக் கொண்டு செய்யும் பயிற்சிகள்தான் இவை. அப்புறம் 'குதித்தல்' பயிற்சிகள் இருக்கின்றன. சாதாரணமான குதித்தல், மசூர்கா என்று பலவிதமான குதித்தல் பயிற்சிகள் உண்டு. குதித்தலின்போது மிகவும் கவனமாகச் செய்ய வேண்டியது landing எனப்படும் சாகசம். ''ஸ்கேட்டிங் பற்றி முழுவதுமாகத் தெரிந்து கொள்ள மூன்று வருடம் ஆகலாம்'' என்கிறார் ஸ்ரீகுமார். ஸ்கேட்டிங்கில் வேகத்தைக் காட்ட, காட்ட விறுவிறுப்பு கூடும்.

ஸ்கேட்டிங் விளையாட்டுகள் இன்னமும் ஆசிய விளை

அந்த நாடுகளில் உருவாகியிருக்கிறார்கள். நமது நாட்டில் கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் இந்த ஆட்டம் ஆர்வத்துடன் பயிலப்படுகிறது. தேசிய அளவில் இந்த மாநிலத்தைச் சேர்ந்த வீரர்கள் பளிச்சிடுகிறார்கள். வயது வாரியாகப் பிரித்துப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த வகையில் ஆறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. குளிர்கால ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஸ்கேட்டிங் முக்கிய இடம் பிடித்திருக்கிறது.

ஒருவருக்கு ஸ்கேட்டிங் கற்றுக்கொள்ளும் ஆர்வம் இருந்தால் உடனடியாகத் தளத்துக்குச் சென்று





ஸ்கேட்டிங் பயணம்

சென்னை வேலம்மாள் பள்ளியில் யு.கே.ஜி படிக்கும் ஐந்து வயது மாணவன் பிராணேஸ்வரன். மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நோக்கில் மார்ச் மாதம் 19ந் தேதி சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஸ்கேட்டிங் மூலம் பயணம் மேற்கொண்டான். ஒரு வருடமாக ஸ்கேட்டிங் கற்று வரும் பிராணேஸ்வரன் கடந்த ஆறுமாதமாக இந்தப் பயணத்துக்குத் தயார் செய்துகொண்டான்.

களத்தில் குதித்து விட முடியாது. முதலில் ஸ்கேடிங் காலணி வாங்க வேண்டும். டிராக் பிளேட், சக்கரங்கள் மற்றும் காலணி (shoe) என்று மூன்று பகுதிகளாக இருக்கும் ஸ்கேட்டிங் காலணிகள் விளையாட்டு மார்க்கெட்டில் கிடைக்கின்றன. 350 ரூபாயிலிருந்து 42000 ரூபாய் வரை மதிப்புள்ள ஸ்கேட்டிங் காலணிகள் இருக்கின்றன. இருப்பினும் பெரும்பாலான ஸ்கேட்டிங் ஆட்டக்காரர்கள் கடைகளில் கிடைக்கும் ரெடிமேட் காலணிகளை வாங்கி உபயோகிப்பதில்லை. காரணம் அவை கால்களுக்குச் சரியாகப் பொருந்தி வராது என்பதுதான். "அப்படி சரியாக பொருந்தாத காலணிகளைப் போட்டுக்கொண்டு களத்தில் இறங்கினால் வேகமாகச் செல்லும்போது பாலன்ஸ் இழந்து கீழே விழும் வாய்ப்பு இருக்கிறது. எனவே டிராக் பிளேட், சக்கரங்கள் மற்றும் காலணிகளைத் தனியே வாங்கி, கால்களுக்கு நன்றாகப் பொருந்தி வருவதுபோல் உருவாக்கிக் கொள்வதுதான் சிறந்த வழி என்கிறார் பயிற்சியாளர் ராஜேஷ்.

சக்கரங்களுக்குள் இருக்கும் பேரிங்குகள் (Bearings) ஒரு முக்கியமான அம்சம். தரமான பேரிங்குகள், வேகத்தை அதிகப்படுத்த உதவும்; தவிர நீண்ட காலம் உழைக்கும். இதுபோன்ற ஸ்கேட்டிங் காலணிகளைத் தயாரித்துத் தருவதில் பயிற்சியாளர் ஸ்ரீகுமார் மிகவும் உதவியாக இருக்கிறார்.

நல்ல முறையில் ஸ்கேட்டிங் பயிற்சி பெற வேண்டுமானால் ஸ்கேட்டிங் தளம் வழவழப்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் வேகம் கிடைக்கும். ஸ்ரீகுமாரின் பெரிய வருத்தம் பெசன்ட் நகர் பயிற்சித்தளம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பதுதான். மாநகராட்சியில் உருவாக்கப்பட்ட இந்தத் தளத்துக்குச் சுற்றிலும் வேலியோ, மதிற்சுவரோ கிடையாது. இதனால் சுதந்திரமாக உள்ளே பிரவேசிக்கும் மனிதர்களாலும், கால்நடைகளாலும் தளம் பாழாகிறது. அருகிலுள்ள கடைக்காரர்களுக்குக் குப்பைத் தொட்டியாகவும் மாறிவிடுகிறது. இதனால் தினசரி மாலை தளத்தைச் சுத்தம் செய்வதே பெரிய வேலையாக இருக்கிறது. இது தவிர கட்டும்போதே தரைப்பகுதியைச் சற்று வழவழப்பாகத் தயார் செய்யாமல் விட்டுவிட்டார்கள். இப்படி பல பிரச்னைகள் இங்கிருக்கின்றன. குறிப்பாக வேலியோ, சுற்றுச்சுவரோ போட்டுத் தந்தால், தளத்தை நன்றாக நிர்வகிக்கலாம் என்கிறார் ஸ்ரீகுமார். தமிழ்நாடு ஸ்கேட்டிங் சங்கம், வருடத்துக்கொரு முறை போட்டிகள் நடத்திவிட்டு ஒதுங்கிக் கொள்கிறதே தவிர பயிற்சி தளங்களை நல்ல முறையில் நிர்வாகிக்க ஒரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என்ற வருத்தம் ஸ்கேட்டிங் ஆர்வலர்களுக்கு இருக்கிறது. மேலும் ஸ்கேட்டிங் தளத்துக்கு நடுவில் தீவு போன்ற ஒரு அமைப்பை வைத்திருப்பதால் 'ஸ்கேட்டிங் ஹாக்கி' விளையாடவும் முடிவதில்லை.

மாலை வேளைகளில் பெற்றோர்கள் தங்கள் மூன்று, நான்கு வயது குழந்தைகளுடன் வந்து அவர்களுக்கு ஸ்கேட்டிங் காலணிகள், பனியன்கள் அணிவித்து பயிற்சிக்குத் தயார் செய்யும் ஆர்வத்தைப் பார்க்கும்போது, இந்த விளையாட்டும் எதிர்காலத்தில் மிகவும் பிரபலமாகிவிடும் என்ற நம்பிக்கை துளிர்விடுகிறது.

— ப்ரியன்

அட்டையில்: ஆகாஷ்
மற்றும் கோச் ஸ்ரீகுமார்
படங்கள்: ஸ்ரீஹரி

வாகனம் ஓட்டும்போது...

கார் முதலிய வாகனங்களை ஓட்டும்போது இசையைக் கேட்டபடி ஓட்டுபவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளார் வாரென் ப்ராட்ஸ்கி. இது தொடர்பாக ஒரு சோதனை நடத்தினார். 28 பேர் வாகனங்களை ஓட்டும்போது விதவிதமான சத்தம், இசையை ஒலிக்கச் செய்தார். இதில் அதிவேகமான சத்தம், இசையைக் கேட்டவர்கள் விபத்துக்கு உள்ளாயினர். மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏதுமில்லை. அதிக சத்தத்துடன் வாகனம் ஓட்டும்போது ஓட்டுபவரின் கவனம் வேகமாகச் சிதைகிறது. அதனால் விபத்து நேருகிறது என்று கூறுகிறார் ப்ராட்ஸ்கி.

கோகுலம் நியூஸ்

காப்பாற்றப்பட்ட குரங்கு


உலகம் முழுவதும் தங்க நிறம் கொண்ட குரங்குக் குட்டிகள் 10,000 மட்டுமே உள்ளன. இத்தகைய தங்க நிறக் குரங்குக் குட்டி ஒன்று சீனாவில் உள்ள ஹீபே மாகாணத்தின் காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. மிகவும் பலவீனமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த குரங்குக்கு ஆடு, மாடுகளின் பால் ஒத்துக் கொள்ளவில்லை. இதை அறிந்த 30 தாய்மார்கள் தாங்களே மனம் உவந்து வந்து பால் கொடுத்துள்ளனர். இப்போது அந்தக் குரங்கு பிழைத்து நன்றாகத் தேறிவிட்டது.

அமைதிக்கு முயற்சி

இலங்கையில் இருபது ஆண்டுகளாக நடந்து வந்த இனப்பிரச்னைக்குத் தீர்வு காண நார்வே தூதுக்குழு முயற்சி செய்து வருகிறது. இதன்படி கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக போர் நிறுத்தம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்து நாட்டில் பேச்சு வார்த்தை நடத்த இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளதாக நார்வே தூதுக்குழு தெரிவித்துள்ளது.

டான்ஸ் ரோபோ

58 செ.மீ உயரமுள்ள வெள்ளியால் செய்யப்பட்ட ரோபோ பொம்மைகளை ஜப்பானிய சோனி நிறுவனம் தயாரித்து உள்ளது. இன்னும் சில மாதங்களில் விற்பனைக்கு வர உள்ள இந்தப் பொம்மைகள் டான்ஸ் ஆடக் கூடியவை. இந்தச் சிறிய ரோபோ பொம்மையின் விலை ஒரு சொகுசு காரின் விலைக்குச் சமமாம்!




யானைக் கால் நோய்!

உலகில் 12 கோடிப் பேருக்கு யானைக்கால் நோய் உள்ளது. இந்தியாவில் மட்டும் நாலரைக் கோடி மக்களுக்கு யானைக்கால் நோய் உள்ளது. ஏறக்குறைய நூறு நாடுகளில் இந்நோய் ஒழிக்கப்பட்டு விட்டது. கொசுக்கள் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு இந்நோய் பரவுகிறது. இந்நோய் உடனடியாக உயிருக்கு ஆபத்து விளைவிப்பதில்லை. எனினும் சிறுநீரகம், நிணநீர் மண்டலத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. 2020 ஆம் ஆண்டுக்குள் இந்நோயை இந்தியாவிலிருந்து முற்றிலுமாக ஒழித்து விட முடியும் என்று கருதப்படுகிறது. இந்நோயாளிகள் 4 முதல் 8 ஆண்டுகள் வரை மருந்து உட்கொண்டால் நோயைக் கட்டுப்படுத்தி விட முடியும்.

எலக்ட்ரிக்

செய்து பாருங்கள்



பலூன் ட்ரிக்


உங்கள் தலைமுடி மேல் நோக்கி நிமிர்ந்து நிற்க வேண்டுமா? இதோ ஒரு எளிய சோதனை மூலம் நிற்க வைக்க முடியும். அதற்கு உங்கள் தலைமுடியைச் சுத்தமாகவும், எண்ணெய், ஈரப்பசை இன்றியும் வைத்துக் கொள்ள வேண்டும்.

எப்படி செய்வது?

1. பலூனை ஊதி உங்கள் தலையில் நன்றாகத் தேய்த்துக்கொள்ளுங்கள்.

2. கண்ணாடியில் பார்த்தபடி மெதுவாக பலூனைச் சற்றுத் தலையிலிருந்து மேல்நோக்கி நகர்த்துங்கள்.

3. என்ன ஆகிறது உங்கள் தலைமுடி? அப்படியே மேலே வருகிறது அல்லவா?



சீப்பு ட்ரிக்

1. பிளாஸ்டிக் சீப்பை நன்றாகப் பலதடவை தலையில் வைத்துச் சீவுங்கள்.

2. மிகவும் மெல்லிய தாள்களைக் கிழித்து இந்தச் சீப்பை அதனிடம் கொண்டு செல்லுங்கள்.

3. காகிதங்கள் துள்ளிக் குதிக்கின்றனவா?


தண்ணீர் ட்ரிக்

இதேபோல் சீப்பைத் தலையில் சீவிவிட்டு, குழாயைத் திறந்து தண்ணீரில் காட்டுங்கள். இப்போது குளிர்ந்த நீர் சற்றுக் கதகதப்பாக ஆகிறது அல்லவா?


காரணம் என்ன?

பலூனும் சீப்பும் தலையில் வைத்துத் தேய்க்கும்போது குறைந்த அளவு மின்சாரம் உருவாகிறது. எனவே தலைமுடி உயர்கிறது. காகிதம் துள்ளுகிறது. தண்ணீர் இலேசாகச் சூடாகிறது.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



வண்ணம் தீட்டுங்கள்!



மீதிப்படம் வரையுங்கள்!



''எங்க வீட்டு கடிகாரம் சரியாகவே நேரம் காட்ட மாட் டேங்குது...''

''சரியான 'வால்' கிளாக்கா இருக்கும் போலிருக்கே!''

- சித்தோடு க. பூங்கொடி.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka